பக்கங்கள்:பன்னிரண்டு

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

# உதயன்

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 03 வியாழக்கிழமை (16.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:141

# பாதுகாப்பு வலயம் மீதான படை நடவடிக்கை ஆரம்பம்

## வலைஞர் மடம் பகுதியில் இரு தரப்புக்களும் துப்பாக்கிச் சண்டை

கொழும்பு, ஏப்ரல் 16

முல்லைத்தீவில் அரசு அறிவித்திருந்த 48 மணித்தியால தாக்குதல் இடைநிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து பாதுகாப்பு வலயம் மீதான யுத்தத்தை இராணுவத்தினர் மீண்டும் ஆரம்பித்திருக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை இரவு தொடக்கம் நேற்று புதன்கிழமை நண்பகல் வரையில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வலைஞர்மடம் பகுதியில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டைகள் நடைபெற்றன - என்று இணையத் தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு வலயத்தை நோக்கிப் படையினர் பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றமையால் அங்கு ஏராளமான பொதுமக்கள் உயிரிழக்கக்கூடிய - பெரும் மனிதப் பேரழிவு ஏற்படக்கூடிய - அபாயம் ஏற்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நேற்றுக்காலை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை இராணுவம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு தொடக்கம் முழுமையான இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளது என இணையத்தள செய்திகள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு வலயத்தில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதிக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் கடைசி மண் அரணைக் கைப்பற்றும் நடவடிக்கையை படையினர் மேற்கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அப்பகுதியில் புதன்கிழமை அதிகாலை முதல் கடுமையான ரொக்கட் தாக்குதலும் துப்பாக்கிச் சமரும் இடம்பெற்றதாகவும் பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் விட்டுச்சென்ற விமான ஏவுகணைகள் மீட்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, ஏப்.16

புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதியில் விடுதலைப்புலிகள் விட்டுச்சென்ற விமான எதிர்ப்பு ஏவுகணைகள் நான்கினையும் 430 மிதிவெடிகளையும் 53 ஆவது படையினர் மீட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
6 ஆம் 7 ஆம் பக்கங்களில்

**கல்விச்சுடர்**

தரம் - 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

## ★ வன்னி மக்களின் பேரபாய நிலை குறித்து ★
## எம்.கே.நாராயணனுடன் கூட்டமைப்பினர் டில்லியில் நேற்றிரவு நீண்ட நேரம் பேச்சு

சென்னை, ஏப். 16

இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் எம்.கே.நாராயணனை நேற்று இரவு சந்தித்து நீண்டநேரம் பேச்சுகளை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் சென்றுள்ள இக்குழுவினர் வன்னியில் படையினர் தற்போது மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் தொடர்பாக விளக்கியதுடன், பாதுகாப்பு வலயத்தில் உள்ள இரண்டரை லட்சம் மக்களுடைய உயிர்களும் ஆபத்தான நிலையில் உள்ளன எனவும் விளக்கிக் கூறினர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உடனடியாக போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியம் என்பதையும் இவர்கள் வலியுறுத்தினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் புறநகர்களில் [illegible] தமிழர்கள் கைது

கொழும்பு, ஏப்.16

கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது 11 தமிழர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பில் எந்தத் தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் அவர்களுடைய (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நடைபெறும் பகுதிகளில் தொற்றுநோய் பரவும் அபாயம்
### செஞ்சிலுவைக் குழு எச்சரிக்கிறது

கொழும்பு, ஏப். 16

போர் நடைபெறும் பகுதிகளில் மனிதாபிமான நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன எனவும் அங்கு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது எனவும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு கூறுகிறது.

மோதல் பகுதியில் சிக்கியுள்ள பொது மக்கள் அபாயகரமான நிலையில் இருக்கிறார்கள் என்றும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து வந்த ஐ.நா. பணியாளர்களும் வவுனியா அகதி முகாம்களில் தடுத்துவைப்பு

கொழும்பு, ஏப்.16

வன்னியிலிருந்துவந்த ஐ.நா. பணியாளர்கள் சிலர் நடமாடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டு, வவுனியா அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முதற்கட்ட வாக்களிப்பு இன்று

சென்னை, ஏப். 16

இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் முதற்கட்ட வாக்களிப்பு இன்று ஆரம்பமாகின்றது. இந்தியா முழுவதிலுமுள்ள 543 தேர்தல் தொகுதிகளுக்கு 5 கட்டங்களாக வாக்குப் பதிவுகள் இடம்பெறுகின்றன. மே மாதம் 13 ஆம் திகதி வாக்குப் பதிவுகள் முடிவடைகின்றன.

ஆந்திரா, மற்றும் கேரளா உட்பட 17 மாநிலங்களில் உள்ள 124 தொகுதிகளுக்கு இன்று முதற்கட்ட வாக்களிப்பு நடைபெறவுள்ளது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியிலுள்ள 40 தொகுதிகளுக்கான வாக்கெடுப்பு மே மாதம் 13 ஆம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நிறுத்தத்தை நிரந்தரமாக்குமாறு பிரிட்டன் இலங்கை அரசிடம் வலியுறுத்து

லண்டன் ஏப்.16

இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள 48 மணிநேர தாக்குதல் இடை நிறுத்தம் நிரந்தரமாக நீடிக்கப்பட வேண்டுமென பிரித்தானிய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்பாண்ட் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரிடம் தஞ்சமடைந்த 236 பேர் கிளிநொச்சி நலன்புரி நிலையத்தில்

கொழும்பு, ஏப்.16

புதுமாத்தளன் பிரதேசத்தில் இருந்து 239 பேர் இடம்பெயர்ந்து நேற்றுமுன்தினம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளனர். அவர்களில் 96 பேர் சிறுவர்கள். அவர்கள் அனைவரும் கிளிநொச்சியிலுள்ள நலன்புரிநிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

இவர்கள் 136 பேர் கொண்ட ஒரு குழுவாகவும் 103 பேர் கொண்ட இன்னொரு குழுவாகவும் பாதுகாப்பு வலயத்தின் எல்லைப்புறத்திலுள்ள இராணுவத் தரப்பினரிடம் தஞ்சமடைந்தனர். என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையும் தாக்குதல் நிறுத்தத்தை நீடிக்க வேண்டுகோள்

கொழும்பு, ஏப்ரல் 16

இலங்கையில் அறிவிக்கப்பட்ட தாக்குதல் இடைநிறுத்தத்தை மேலும் நீடிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத் தலைமை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை தற்போது வகிக்கும் செக் குடியரசு விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்த வேண்டுகோள் (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

## மேலும் 28 பேர் முல்லை.யிலிருந்து

யாழ்ப்பாணம், ஏப்.16

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து மேலும் 12 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் கடந்த திங்கட்கிழமை தென்மராட்சிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இங்கு வந்த குடும்பங்கள் இப்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-207)


## பிற்போடப்பட்டுள்ளது

### யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

இம்மாதம் 18, 19ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வில் ஏராளமானோர் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்திருப்பதால், அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க பிற்போடப்பட்டு மிகப்பாரியளவில் மேற்கொள்ளப்படுவதற்காக மே மாதம் 07, 08, 09, 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கௌரவ செயலாளர்: ஜெ.ஜெயபலன்
வட இலங்கை சுதேச மருத்துவ சபை,
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0775594147, 0772487044.

## விற்பனைக்கு

றெட்லேடி பப்பா, இந்தியன் முருங்கை, இந்தியன் மாதுளை, ஒட்டு மா, ஒட்டுத் தேசி, ஒட்டுச் செவ்வரத்தை, ஒட்டு றோஸ், யம்பு நாவல், சமண்டலை, மலைவேம்பு கட்டை இனத் தென்னை, கமுகு, ஈரப்பலா போன்ற பயன்தரும் மரக்கன்றுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆனந்தி பழமலர்ச் சோலை, றொட்டியாலடி, மருதனார் மடம்.**
**(இராமநாதன் கல்லூரி அருகில்)**
**தொ.பே: 0778863365, 0771710223**


## காணவில்லை



மூன்று பிள்ளைகளின் தந்தையான
சந்தனம் செல்வக்குமார் (வயது 41)
இவர் கடந்த 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு 7.30 மணியளவில் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. இவரை காணாது நாங்கள் தவிக்கின்றோம். தயவுசெய்து எங்கிருந்தாலும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*30/1 கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (84431) மனைவி, பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### *சுதிஸ்னன் யாழினி*

கடந்த 17.03.2009 அன்று வவுனியாவில் சிவபதம் அடைந்த எமது பெறாமகளின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு ஆறுதல் அளித்த எழுதுமட்டுவாள், நயினாதீவு மக்களுக்கும் மற்றும் கொடிகாமம் அஞ்சல் அலுவலகதபால் அதிபர், உதவி தபால் அதிபர்கள், அஞ்சலர்கள், ஊழியர்கள், எழுதுமட்டுவாள் உப தபால் அதிபர், அஞ்சலர்கள், அனைவருக்கும் எமக்கு தந்தி மூலம் அனுதாபச் செய்தியை அனுப்பிய மற்றும் மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெ.திருநாவுக்கரசு (நயினாதீவு),
பெ.ஜெயபாலசிங்கம்
(அஞ்சலர், எழுதுமட்டுவாள்).

*26/22, வளாக வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (84424)

## கிரிக்கெட் பயிற்சியாளர்களுக்கு பயிற்சியும், பரீட்சையும்

யாழ்ப்பாணம், ஏப்.16

யாழ்.மாவட்ட பாடசாலைக் கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான பயிற்சியும், தராதரப் பத்திரம் வழங்குவதற்கான பயிற்சியும் நடைபெறவுள்ளன.

இதற்கெனகொழும்பிலிருந்து இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் டி.எஸ்.டி.சில்வா, பயிற்சி முகாமையாளர் மல்கம் பெரேரா உட்பட 10 வளவாளர்கள் வருகை தரவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிக்குத் தமது பெயர்களைப் பதிவு செய்தவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (4)

## நலன்புரி நிலையங்களில் தொற்று நோய்கள்

யாழ்ப்பாணம், ஏப்.16

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் கண் நோய், அம்மை நோய் ஆகியன பரவி வருகின்றன.

இந்நோய்களினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் பிரதேச மருத்துவ மனைகளிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் இந்தநோய்கள் பரவாமல் தடுப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்தினர் துரித கதியில் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-207)

## தவறவிடப்பட்டது

பிள்ளையார் கோயிலடி, துணவி, சங்கரத்தை என்னும் முகவரியுடைய திருநாவுக்கரசு லிங்கதாசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (823070632V) மற்றும் விசேட அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் கோயில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 651/12, நாவலர் வீதி, நல்லூர் என்னும் முகவரியுடன் அல்லது T.P 021 222 2461 தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (84429)

## தவறிவிட்டது

மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்னும் விலாசமுடைய சுந்தரலிங்கம் பிரதீபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (841465130V)தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் தெற்கு (J/196) கிராமசேவையாளரிடம் ஒப்படைக்கவும். (84432)


## தோட்டக் காணி விற்பனைக்கு

அளவெட்டி டச்சுறோட்டில்
8 பரப்பு தோட்டக்காணி
விற்பனைக்கு உண்டு
**தொடர்பு:**
காலை 9 மணியிலிருந்து
மாலை 6 மணிவரை
2447436


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகரட்ணம் சிவபாக்கியம்**
**(பொன்னு)**

தோற்றம்
13.02.1956

மறைவு
03.04.2005

இவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர்- **கனகரட்ணம்,**
மகன்- **ரவீந்திரன்** (பிரான்ஸ்),
மருமகள்- **தபோதினி,**பேர்த்தி-**திசாலினி.**

மீசாலை வடக்கு,
மீசாலை.
(84430)

## மரண அறிவித்தல்கள்

### *சண்முகம் கங்காதரன்*



கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கங்காதரன் கடந்த 12.04.2009 ஞாயிற்றுக்கிழமை சவுதி அரேபியாவில் அகால மரணமானார்.

அன்னார் சண்முகம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபதிராஜன் குறிச்சி,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.* (84428)
*0776140681*
தகவல்:
குடும்பத்தினர்.

### *பேரம்பலம் ஆறுமுகம்* (வட்டர்)

காரைநகர், அம்பிளாவைப் பிறப்பிடமாகவும், தற்போது புத்தளத்தில் வசித்தவருமான பேரம்பலம் ஆறுமுகம் 14.04.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரமசாமியின் சகோதரனுமாவார்.

அன்னாரது தகனக்கிரியை புத்தளத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*களபூமி,*
*காரைநகர்.* (84424)
*தகவல்:*
மாலினி (மதி - மகள்).

### *செல்லையா சுப்பிரமணியம்*

நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் 14.04.2009 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வள்ளிநாயகிஅம்பாளின் அன்புக் கணவரும் தவசீலன் (இத்தாலி), அனுஷா, ஜிந்துஜா, தனசீலன், சுதர்ஷா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*
தகவல்:
சு.தனசீலன் (மகன்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கந்தையா பரமேஸ்வரன்**
**(வரதா)**
(பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ், அச்சுவேலி)



தோற்றம்: 11.10.1956
மறைவு: 27.04.2008
திதி: ஸப்தமி

பாசமொடு பண்புகள் பல நிறைந்து
நேசமொடு எங்கள் மனங்களில்
வாசமலராய் நிறைந்திருந்த எங்கள் அப்பா
இறைவனடி சேர்ந்து ஓராண்டில்
அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*
குடும்பத்தினர்.


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வது)

## பதவி வெற்றிடம்

பதவி - கணனி விரிவுரையாளர் (ஒப்பந்த அடிப்படை)

தகைமைகள் - க.பொ.த.உயர்தரம் சித்தியுடன் கணனி கற்கை தொடர்பான MS.OFFICE, ACCOUNTING PACKAGE, INTERNET TECHNOLOGY சித்திபெற்று ஏற்றுக்கொள்ளக் கூடிய நிறுவனம் ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்.

வயதெல்லை - 25 - 45

மேலதிக தகைமை - வர்த்தகவியல் அல்லது கணக்கியல் தொடர்பான மேலதிக கற்கைநெறி சான்றிதழ் OVER HEAD PROJECTER மற்றும் MULTI MEDIA பயன்படுத்தும் அனுபவம், கற்பித்தல் திறன் மற்றும் ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி - 02.05.2009

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

ரூபா 20/= செலுத்தி விண்ணப்பப்படிவத்தை சபையில் பெற்று ***செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி, 2 ஆம் மாடி, இல.12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்*** என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பதில் செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இணைத்தலைமைகளே, இனி என் செய்வீர்!

வன்னி - முல்லைத்தீவு - மக்களின் அவலங்கள் நீங்குவதற்கான எந்த நல்ல அறிகுறியும் தெரியவில்லை. போர்ப் பிரதேசங்களில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதில்லை. தேவையைவிட கால்வாசி, அரைக்கால்வாசியைப் பெற முடிந்தாலும் யானை விலை, குதிரை விலை கொடுக்க வக்கற்றவர்கள், அதற்கான பணப்புழக்கம் இல்லாதவர்கள், முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்ட நிலையில் பொழுதைக் கழித்து உடல் வற்றிச் சாகும் நிலைதான்.

முல்லைத்தீவுப் பகுதியில் அரிசி, கோதுமைமா மற்றும் உப உணவுப் பொருள்கள் போதியளவு இல்லை என்பது வெளிச்சம். பணப்புழக்கம் இல்லாத பகுதியில் அவற்றின் விலைகள் அவர்களுக்கு எட்டாத தொலைவில் உயரப் பறப்பது இயல்பே. தொழில் இன்றி, வருமானம் இன்றி, நிரந்தர அகதிகளாகிவிட்ட லட்சக் கணக்கான மக்கள் தங்கியுள்ள அந்தப் பகுதியில் ஆயுதத் தாக்குதலுக்கு இலக்காகி இறப்பதற்கு முன்னதாகவே, மக்களில் மிகப் பெரும் எண்ணிக்கையினர் பட்டினியால் சாகும் நிலை உருவாகப்போகிறது!

இப்போது அங்கு கிடைக்கும் உணவு மற்றும் பொருள்களின் அளவு யானைப் பசிக்குச் சோளப் பொரி தான். அதுவே உண்மை நிலை. அவ்வாறு இல்லை எல்லாமே தாராளமாகக் கிடைக்கின்றன என்று கூறமுடியாது.

புதுவருட தினமான கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்புப் பிரதேசத்தில் கஞ்சி வார்க்கப்பட்டபோது அதனைப் பெறுவதற்கு முண்டி அடித்த சின்னஞ் சிறுசுகளின் பிஞ்சு முகங்களில் அந்தப் பிரதேச மக்களின் வறுமையும், வெறுமையும், விரக்தியும் பிரதிபலிக்கின்றன!

முல்லைத்தீவில் ஏற்கனவே மனிதப் பேரவலம் தாண்டவமாடத் தொடங்கிவிட்டது என்பதனையே மேலே சுட்டிக்காட்டப்பட்டவை வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய ஒரு நிலையில், வன்னி மக்களுக்குத் தேவைப்படும் அவசர மனிதாபிமான உதவிகளை அனுப்புவதற்கு இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் இரண்டு தரப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.

வன்னியில் சிக்கியுள்ள மக்களுக்குத் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை - உணவு மற்றும் மருந்துப் பொருள்களை - அவசரமாக அனுப்ப வேண்டும். காயமுற்றவர்களையும் மற்றும் நோயுற்றவர்களையும் அப்புறப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இவற்றைச் செயற்படுத்த இரண்டு தரப்புகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இணைத்தலைமை நாடுகள் கேட்டுள்ளன.

இலங்கை அரசு அறிவித்த 48 மணி நேரத் தாக்குதல் இடைநிறுத்தத்தை அடுத்து, இலங்கையில் உள்ள நிலைமை குறித்து அமெரிக்காவில், அந்நாட்டின் உதவி அமைச்சர் றிச்சார்ட் பௌச்சர் தலைமையில் திங்களன்று நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுவதற்கு முடிவாகியது.

அந்தத் தகவல் இரு சாரரின் கைகளுக்கும் உடனடியாகக் கிடைத்ததா என்பது குறித்துத் தகவல் எதுவும் இல்லை. இணைத்தலைமை நாடுகளின் கோரிக்கை செய்தியாகப் பத்திரிகைகளில் வெளிவந்து வாசகர்களுக்குக் கிடைக்கு முன்னரே, இலங்கை அரசின் இரண்டு நாள் அவகாசம் முடிவுற்று இராணுவம் பாதுகாப்பு வலயப்பகுதிக்ள் மீது தாக்குதல்களை ஆரம்பித்துவிட்டது. நேற்று, புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கே தாக்குதல் இடைநிறுத்தம் நீர்த்துப் போயிற்று.

அதனால், இணைத்தலைமை நாடுகளின் கோரிக்கையும் கேள்வி நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

ஆனால், அதற்காக இணைத்தலைமை நாடுகள் தமது கோரிக்கையைத் தூக்கிவீசிவிட்டுப் பொறுப்பற்று இருக்க நினைக்கத் தகுமா?

அரசாங்கம் தனது தாக்குதல் இடைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது. முல்லைத்தீவில் சிக்குண்டுள்ள மக்களை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப வெளியே செல்ல விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை. அதனால், எங்களால் மனிதாபிமான உதவிகளைச் செய்யமுடியவில்லை என்று வாளாவிருப்பது நியாயமே அல்ல.

இரண்டு தரப்புகளுடனும் தொடர்பு கொண்டு மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்து, முல்லைத்தீவில் நிகழும் பெரும் மனிதப் பேரவலத்தைத் தடுப்பதற்குரிய சரியான உத்தியை இனங்கண்டு, தமது சக்தியைப்படுத்தி அவர்களைத் காப்பாற்ற வேண்டும்.

முல்லைத்தீவு நிலைமை உள்நாட்டுப் பிரச்சினை என்ற எல்லையைக் கடந்து, உலகப் பிரச்சினையாக - லட்சக் கணக்கான மனித உயிர்களைக் காப்பாற்றும் மிகப் பெரும் மனிதாபிமான நெருக்கடியாக - மாறியுள்ளது.

இதனை இராணுவத் தீர்வு வகைக்குள் வைத்து நோக்காது, மனித உயிர்களுடன் விளையாடும் பெரும் விவகாரமாக அணுகி, உரிய மாற்றுவழி மூலம் எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவரலாம் என்று மனித நேயத்துடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இணைத்தலைமை நாடுகள் தமது பிராந்திய நலன்களைத் தக்கவைக்கும் உள்நோக்கங்களுடன் செயற்படவும் முனையக் கூடாது. இயற்கை அனர்த்தங்களை, அவற்றால் வரும் விளைவுகளைத் தடுப்பதற்கு கூட்டுமுயற்சியில் ஈடுபடுவது போன்று, இலங்கை விவகாரத்தையும் மனதில் கொண்டு லட்சக் கணக்கான மக்களின் உயிர் மீட்புக்கு உதவ வேண்டும். நாகரிக யுகத்தின் பண்பு அதுவாகவே இருப்பது அவசியம். செய்வார்களா? அல்லது காலத்தை விரயம் செய்து மனிதப் பேரவலத்திலும் கண்கட்டு வித்தை காட்டு வார்களா?

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை பிரதிநிதி யாழ்.விஜயம்

## புதிய கட்டடங்களை அவர் திறந்து வைப்பார்

நல்லூர், ஏப்.16

உரும்பிராய் ஆரம்ப சுகாதாரா நிலையத்தில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நிக்கொட் திட்டத்தின் கீழ் 8 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை யாழ்ப்பாணம் வருகை தரும் அபிவிருத்தி வங்கியின் இலங்கைப் பிரதிநிதி றிச்சாட் லொகிஸ் திறந்து வைக்கவுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் யாழ்.குடாநாட்டில் நடைபெறவுள்ள நிக்கொட் வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக வருகைதரவுள்ள றிச்சாட் லொகிஸ், எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் 14 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டடத்தை யும் அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் 14 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டடத்தையும் திறந்துவைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் நிக்கொட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட நிபுணர் எம் திருச்செல்வம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் திருமதி சன்டீபனி கொடித்துவக்கு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள் என யாழ். நிக்கொட் முகாமையாளர் எஸ்.சிவரூபன் தெரிவித்தார். (204- 111)

## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.16

நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை ஒட்டி யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் 17 ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியிடப்படவுள்ளது.

இந்த மலருக்கான ஆக்கங்கள் ஆய்வுக் கட்டுரைகள்,கவிதைகள் ஆகியவற்றை எதிர்வரும் யூன் மாதம் 30ஆம் திக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சைவசமய விவகாரக் குழு அறிவித்துள்ளது.

## முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்த சிறுவர்களில் நான்கில் ஒரு பகுதியினருக்கு போஷாக்குக் குறைபாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் நான்கில் ஒரு பங்கினர் போஷாக்குக் குறைபாட்டிற்கு உட்பட்டுள்ளனர் எனப் புள்ளி விபரங்கள் தெரிவிப்பதாக ஏ.எப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றை மேற்கோள்காட்டி சுகாதார அமைச்சு இத்தகவலை வெளியிட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் போஷாக்கு குறைபாட்டுக்குள்ளான சிறுவர்களின் சதவீதத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள மற்றொரு மாவட்டமான திருகோணமலையே 24 சதவீதமாக இதுவரை முன்னணியில் இருந்துள்ளது.

அண்மைய ஆய்வின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டம் திருகோணமலை மாவட்டத்தை முந்தியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் போஷாக்கு குறைபாட்டிற்கு உள்ளானோரின் சதவீதம் 25 ஆகப் பதிவாகியுள்ளது. இது தான் நாட்டிலேயே அதிகூடிய சதவீதமாகும்.

இது இ[illegible] புலிகளின் கட்டுப்பாட்டுப் ப[illegible]ல் சிக்கியுள்ள சிறார்கள் மத்தியிலான போஷாக்கு குறைபாட்டையும் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது.

எவ்வாறெனினும் மோதல் வலயத்திலுள்ள மருத்துவர் ஒருவர் அப்பகுதியில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களில் 69 சதவீதமானோர் போஷாக்கு குறைபாட்டுக்குள்ளாகியுள்ளதாக தெரிவித்ததை சுகாதார அமைச்சின் அறிக்கை மறுத்துள்ளது. (50)

## வன்னிக்குச் செல்ல ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவேண்டும் - ஆர்.எஸ்.எவ்.

பாரிஸ், ஏப்.16

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் யுத்த வலயத்திற்கு சென்று சுயாதீனமான முறையில் செய்திகளைச் சேகரிக்க அரசாங்கம் விதித்துள்ள தடையை ஏற்றுக்கொள்ள முடியாதென பாரிஸை மையமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் பேரவை தெரிவித்துள்ளது.

பாரிய மனிதஉரிமை மீறல் மற்றும் யுத்தக் செயல்கள் மோதல் இடம்பெற்று வரும் வலயங்களில் இடம்பெற்று வருவதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமை குறித்து உள்நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்ட ஊடகங்களுக்குள்ள தார்மீகக் கடமைக்கு மதிப்பளித்து அனுமதி அளிக்கப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதப் படையினர் ஊடகவியலாளர்களின் கடமைகளுக்கு இடையூறு செய்து வருவதாக ஆர்.எஸ்.எப் குறிப்பட்டுள்ளது.

துரதிஸ்டவசமாக, ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை காணப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கை முக்கிய இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50)

## தென்னாபிரிக்காவில் தொடரும் ஈழவேந்தனின் உண்ணாவிரதம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க ஈழவேந்தன் தென்னாபிரிக்காவில் தனது உண்ணா நோன்பை நேற்று ஆறாவது நாளாகத் தொடர்ந்தார். அவர் தன்னுடைய கோரிக்கைகளைத் சர்வதேச சமூகம் செவிமடுக்கும் வரைக்கும் தன்னுடைய முயற்சியைக் கைவிடப்போவதில்லை எனக் குறிப்பட்டார்.

தென்னாபிரிக்க மண் சுதந்திரப் போராட்டம் விளைந்த மண். அதனாலேயே தென்னாபிரிக்க சமூகத்திலும் தென்னாபிரிக்க அரசாங்கத்திலும் தனக்கு நம்பிக்கை இருக்கின்றது என ஆறாவது நாளாக நீராகாரம் மட்டும் அருந்திக்கொண்டு தனது உண்ணா நோன்பைத் தொடர்ந்த ஈழவேந்தன் தெரிவித்தார்.

அவர் தென்னாபிரிக்க அரசாங்கத்திடமிருந்து தன்னுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவான உறுதிமொழி கிடைக்கும் என எதிர்பார்ப்பதுடன், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களின் ஆதரவைத் தொடர்ந்து இவ்வாறான உறுதிமொழி மிகவிரைவில் கிடைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஈழவேந்தன் மாரியம்மன் கோவிலில் கூடியிருந்த மூவாயிரத்திக்கும் அதிகமான மக்கள் மத்தியில் உரையாற்றினார். அங்கு, கொசாற்று அமைப்பின் தலைவர் சிடும்மோ ட்லாம்னி, புலனாய்வுத்துறை அமைச்சர் சியாம்பொங்க சிவாலா மற்றும் தொலைத்தொடர்பாடல் பிரதியமைச்சர் றோயல் படையாச்சி போன்ற அரசியல் பிரமுகர்களும் கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவிஸில் உண்ணாவிரதமிருக்கும் கிருஸ்ணாவுடன் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் சந்திப்பு

ஜெனீவா, ஏப்.16

உண்ணாநிலைப் போராட்டம் நடத்திவரும் சுவிஸ் தமிழர் பேரவையின் இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணரை சுவிற்சர்லாந்து வெளிவிவகாரத்துறை அமைச்சின் அரசியல் பிரிவின் அதிகாரிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலின்போது சுவிற்சர்லாந்து வெளிவிவகாரத் துறை அமைச்சர் கால்மி ரேயிடம் கையளிக்குமாறு கிருஸ்ணா அம்பலவாணர் தனது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினையும் அதிகாரிகளிடம் கையளித்தார்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கிருஸ்ணா அம்பலவாணர் தொடங்கிய போராட்டம் சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் குழுமி நிற்க இரவு இரவாக உணர்வுடன் நடைபெறுகின்றது.

ஆனால், நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இவர் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தும் வெளிவிவகாரத்துறை அமைச்சின் அலுவலகத்திற்கு அருகில் உள்ள சதுக்கத்திற்கு வந்த சுவிஸ் காவல்துறையினர், கிருஸ்ணா அம்பலவாணரை அந்த இடத்தை விட்டு அகன்று செல்லும்படி தெரிவித்தனர்.

பிற்பகல் 1 மணிக்கு மீண்டும் அங்கு வந்த காவல்துறையினர், இவரது உண்ணாநிலைப் போராட்ட அனுமதியினை மீளப்பெறுவதாகத் தெரிவித்தனர்.

அதனையடுத்து, அங்கிருந்து எழுந்த இவர், வெளி விவகாரத் துறை அமைச்சின் அரசியல் அலுவலகப் பிரதான செயலகத்தினை அடைந்து அதன் பிரதான வாசலில் அமர்ந்து போராட்டத்தினை தொடர்ந்தார்.

அங்கு கூடி நின்ற மக்களும் அவருக்குப் பின்னால் தொடர்ந்து சென்று தமது ஆதரவினை வெளிப்படுத்தினர்.

இடம் மாற்றப்பட்ட நிலையிலும் கிருஸ்ணா அம்பலவாணர், உண்ணாநிலைப் போராட்டத்தை தொடந்ததை கண்ணுற்ற சுவிற்சர்லாந்து வெளிவிவ காரத்துறை அமைச்சின் அரசியல் பிரிவின் அதிகாரிகள், அவரை அமைச்சின் அலுவலக கட்டடத்திற்குள் அழைத்து போராட்டம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர். (50)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 4 | 17.04.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | அட்டமி முழுவதும் |
| நட்சத்திரம்: | உத்தராடம் முழுவதும் |
| சுபநேரம்: | 03.03 - 04.33 |
| ராகுகாலம்: | 09.03 - 10.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன்சந்தையில் நுகர்வோர் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப்.16

பாஷையூர் மீன் சந்தைக்கு வரும் நுகர்வோரின் தொகை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளமையால் சந்தையில் இட நெருக்கடி ஏற்பட்டு நுகர்வோர் அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மீன் சந்தைக்கு வரும் மக்கள் தமது சைக்கிள்களை பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கும் போதிய இடவசதி இன்றி சிரமப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

## சாதிக்கப் பிறந்தவள் பெண்

20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியாரின் கனவை நனவாக்கி கொண்டிருக்கிறது இன்றைய சமூகம். மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று பெண்ணின் பெருமை பற்றி கூறுகிறார் கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை. பெண் பிறப்பே பெருமைமிக்க பிறப்பாகும். பெண்ணானவள் அடக்கமானவள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் பொருந்தப் பெற்றவள். பொறுமையின் சிகரமானவள் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறாள்.

ஒரு சமூகத்தை உருவாக்குபவளும் பெண் சமுதாயத்தை வளர்ப்பவர்களும் பெண்களே. சமூகத்தில் ஆணிவேராகத் திகழ்கின்ற பெண்கள் அச்சமூகத்திற்கு ஆற்றும் சேவைகள் அளப்பரியன. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று பெண்ணை போற்றினார் புரட்சிக் கவிஞர் பாரதி. இன்று பெண்கள் சமூகத்தின் அடிமட்ட வேலை தொடங்கி அரசாளும் பணி வரை அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு சரிநிகர் சமனாக முன்னேறி வந்துவிட்டார்கள் என்று கூறுவதில் ஐயமில்லை.

நாட்டை ஆளும் ஜனாதிபதியாக, சட்ட வல்லுனராக, பொறியியலாளராக, விமானியாக, விஞ்ஞானியாக, ஆய்வாளராக, கணனி வல்லுநர்களாக, வைத்தியராக சாதனை படைத்து உலகில் வலம் வரும் பெண்கள் விடுதலை போராட்டங்களில் வீராங்கனைகளாக தமது வலிமையை நிலை நிறுத்த தவறில்லை. எல்லாவற்றிற்கு மேலாக தம் குடும்ப முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் உழைத்து தம் குழந்தைகளை நற்பிரஜைகளாக்கி சமூகத்திற்கு தருவதன் மூலம் சிறந்த தலைவர்களை ஒரு நாட்டிற்கு வழங்குகின்றனர்.

அன்பு, கருணை, பொறுமை, தியாகம் முதலான பண்புகள் இயல்பாகவே பெண்களிடம் அமைந்துள்ளதால் நம்பிக்கைக்குரிய பொறுப்புக்களுக்குரிய முக்கிய பதவிகள் பெண்களைத் தேடி வருகின்றன. பெண்ணை வீட்டிற்குள் பூட்டி வைத்திருந்த காலங்கள் மாறி பெண்ணானவள் எல்லாவற்றையும் சாதிக்க பிறந்தவள் என்ற கருத்து இன்று எல்லோர் மனதிலும் மத்தியிலும் வேரூன்றி காணப்படுகின்றது. ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் நிச்சயம் ஒரு பெண் இருப்பாள் என்று கூறுவர். கவிஞர்களுக்கு கருப்பொருளாக அமைபவளும் பெண்தான். தன் நலன் கருதாது கணவன், பிள்ளைகள் ஆகியோரின் தேவைகளை ஒரு பெண் சீராக நிறைவேற்றுவதாலேயே அவளுக்குப் பல பெருமைகள் கிடைக்கிறன. சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவன் கூட தன் சக்தியான உமையாளைக் கொண்டே உலகை இயக்குகின்றார்.

மெழுகுவர்த்தி எவ்வாறு தான் உருகி மற்றவர்களுக்கு ஒளி கொடுக்கிறதோ அது போலவே ஒரு பெண்ணும் தொழிற்படுகிறாள் என்பதை மறுப்பதற்கு எதுவுமில்லை.

பெண்ணொருத்தி என்ற வகையில் எதையும் எப்போதும் நிச்சயமாக சாதிக்கலாம். ஐயமில்லை.

வி.கீர்த்தனா யா/வேம்படி உயர்தரப் பாடசாலை, A/L 2009, கலை.

## இளமைக் கடப்பாடு

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை மனித வாழ்வின் நல்வித்தாக அமைகின்றன. கடமை என்ற பதத்தை நோக்கும்போது ஒவ்வோர் உள்ளத்திலும் வெவ்வேறு விதமான சிந்தனைகள் எழுகின்றன. சிலர் ஏதோ பிறந்து விட்டோம் எப்படியோ வாழ்ந்து மடிவோம் என எண்ணுகின்றார்கள். ஆனால், அவ்வாறு இருப்பவர்களின் உள்ளங்களில் கூட கடமை உணர்ச்சி உறுத்தத்தான் செய்கிறது. ஆம். இவ் உலகிலே! மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமைகள் இருக்கின்றன. அதனை சரிவர நிறைவேற்றுபவனே பூரண மனிதனாகத் திகழ்கின்றான். வள்ளுவர் கடமையின் மகத்துவத்தை திருக்குறளிலே அழகாக வகுத்துக் கூறுகின்றார். ஓர் கணவனின் கடமையென்ன மனையாளின் கடமையென்ன. மகன் தந்தைக்காற்றவேண்டிய தென்ன. என்றெல்லாம் அழகாகத் தெளிவாக வகுத்துக் கூறியுள்ளார். ஆகவே, வாழ்வின் நிகழ்வுகள் அனைத்திலும் ஒவ்வோர் கடமைகள் இருக்கத்தான் செய்கின்றன. கடமைகள் பல. அவற்றைச் சரிவரச் செய்து நிறைவேற்றுவது எம் ஒவ்வொருவரினதும் இலட்சியமாக இருத்தல்வேண்டும். ஆனால், இக்கடமைகளை நேரிய வழியிலே செய்யும்போது, செய்ய முற்படும்போது எம்மை நோக்கி சோதனைகள் தொடரத்தான் செய்கின்றன. ஆனால், எம் வழி நேர் வழி என்ற இலட்சியத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது. சோதனைகள் மத்தியில் சாதனை புரிவதுதான் திறமை. எந்த ஒரு இன்னல்வரினும் நம் கடமையை நாம் மறக்கக்கூடாது.

கடமையை விடச் சிறந்த செல்வம் வேறில்லை. மனிதன் தனது கடமைகளை உணர்ந்து ஒழுகும்போதுதான் வாழ்வின் பற்பல கோணங்களைக் காணுகின்றான் என மகாத்மா காந்தி கூறியுள்ளார். வேலி இல்லாத பயிர் விலங்குகளால் அழிக்கப்பட்டு வீணாகிறது. அது போல கட்டுப்பாடு இல்லாத கடமைகொண்ட வாழ்வு பாழாகிவிடும். கட்டுப்பாடு என்பது சந்தையில் வாங்கக்கூடிய பொருளல்ல. நாமே உள்ளத்தில் விதைத்து பயிர்செய்து அறுவடை செய்கின்ற அரியபொருள். இளமை முதற்கொண்டு கட்டுப்பாட்டுடன் எமது கடமைகளை செய்துவர வேண்டும். ஆகவே எமது கடமைகளை சரிவர நிறைவேற்றுவதே எமது இலட்சியமாக இருக்க வேண்டும். ஏனெனில் நாளைய சமுதாயத்தில் மலரவேண்டிய மொட்டுக்கள் இன்று நம் கையில். அம்மொட்டுக்களை பல்வேறுதுறைகளில் மலரச்செய்து மணம் வீசச் செய்யும் கடமை நம் கையில்.

மாறாத நம் கடமையினால்
மலரவேண்டிய இம் மொட்டுக்களை
மலர்ந்து மணம் வீசச் செய்வோம்.

ஆசிரியர் திருமதி வ.சிறீதரன்,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## என் பிரியமான தோழனுக்கு...

என் பிரியமான தோழனுக்கு
என் அருமை உறவுகளே....
பாசமான தோழர்களே
பழகிப் பிரிந்து போகிறேன்.....
என் அன்பை மறந்திடாதீர்கள்

காலங்கள் போடும் கோலங்கள்
கண்ணீர் சிந்தும் கவிதைகள்.....
நிழலானது எனது நினைவுகள்
நிஜமற்றுப் போய் விட்டன....

கண்கள் பேசும் மொழிகள்
என்றும் கனவுகள் மாறாது......
உன்னை பிரியும் காலங்கள்
எனக்கு உயிரோடு கிடையாது.....

பேச வார்த்தை இல்லை
தொட உணர்வு இல்லை.....
நடமாடும் பிணமாக இன்று
திடமற்று போகிறேன் நண்பா.....

மீண்டும் ஒரு பிறப்பிருந்தால்
பள்ளித் தோழராய் பாதம் பாதிப்போம்.....
அதுவரை உன்னை நினைத்தபடி
எந்தன் உயிர் உறவாடிய படியே
உன் நண்பன் தான்....

சி.ஸ்ரீனுஜா, தரம் 10.

## துயரம்

துடிக்கும் நெஞ்சும்
பிஞ்சு மனதும்
வலி கண்ட விழியும்
கண்ணில் வரும் நீர்த்துளியும்
துயரம் கண்ட இதயமும்
காயம் கண்ட சதையும்
வடிக்க தான் முடியுமா

நீண்ட துயரங்களும்
பிரிவை சந்தித்த மனதும்
அமாவாசை நிலவும்
மேற்கில் உதிக்கும் சூரியனும்
நீண்ட நாள் கசப்பும் வரண்ட நாவும்
வடிக்க தான் முடியும்

ஐ.தனுஜா,
கைதடி தெற்கு.

## நேரத்தின் மதிப்பு



* ஒரு வருடத்தின் மதிப்பு என்னவென்று பரீட்சையில் தோல்வியடைந்த ஒரு மாணவனிடம் கேளுங்கள்.
* ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று குறைப் பிரவசமான தாயிடம் கேளுங்கள்.
* ஒரு வாரத்தின் மதிப்பு என்னவென்று ஒரு வாரப் பத்திரிகை ஆசிரியரிடம் கேளுங்கள்.
* ஒருநாளின் மதிப்பு என்னவென்று அன்று வேலை கிடைக்காமல் போன தினக்கூலி வாங்கும் ஒருவரிடம் கேளுங்கள்.
* ஒரு மணிநேரத்தின் மதிப்பு என்னவென்று சந்திக்கக் காத்திருக்கும் காதலர்களிடம் கேளுங்கள்.
* ஒரு நிமிடத்தின் மதிப்பு என்னவென்று ரயிலை தவற விட்ட பிரயாணியிடம் கேளுங்கள்
* ஒரு விநாடியின் மதிப்பு என்னவென்று ஒரு விபத்தில் உயிர் தப்பியவரை கேளுங்கள்.
* ஒரு மில்லிசெக்கனின் மதிப்பு என்னவென்று ஒலிம்பிக்போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவரை கேளுங்கள்.

வி.திவாகரன் 9 A, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## கேள்விக்கு என்ன பதில்? -22

ஓர் ஊரில் ஒரு விவசாயி இருந்தார். அவருக்கு 3 மகன்கள் இருந்தனர். அவரிடம் 17 மாடுகள் இருந்தன. அவர் முதுமையடைந்து விட்டார். தன் முதல் மகனுக்கு 1/2 பங்கு, இரண்டாம் மகனுக்கு 1/3 பங்கு, மூன்றாம் மகனுக்கு 1/9, பங்கு என்று கூறி இறந்தார். அவர்கள் மூவரும் இம்மாடுகளை பிரிக்கமுடியாமல் கஷ்டப்பட்டனர். ஒருவர் தனது மாட்டைக்கொடுத்தார். இதன் விளைவு என்ன?

*(சரியான விடையை 26.04.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)*

## இளவல்கள் வட்டம்

YOUTH

### இந்த வாரம் வரலாற்றில்

**ஏப்ரல் - 10**



திரைப்படக் கமராவை உருவாக்கி வர்ணப் புகைப் படத் தயாரிப்பில் புது உத்திகளை அறிமுகப் படுத்தியவர்கள் அகஸ்டி லூமிரி, லூயி ஜீன் சகோதரர்கள் இவர்களில் அகஸ்டி லூமிரி 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி இறந்தார்.

**ஏப்ரல் - 11**

மாவீரன் நெப்போலியனின் வெற்றிச் சரிதம் முடிந்து வேறு வழியில்லாமல் அவன் தனிமைச் சிறைக்கு 'எல்பா' தீவுக்குச் சென்றது 1814 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதிதான்.



**ஏப்ரல் - 12**



ரஷ்ய விண்வெளி வீரரான யூரி ககாரின் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி விண்வெளிக்குச் சென்றார். விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன் இவர்தான்.

**ஏப்ரல் - 13**

இந்தியாவின் புகழ்பெற்ற வீணை வாத்தியக் கலைஞராக மிளிர்ந்த எஸ்.பாலச்சந்தர் என்பவர் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி மாரடைப்பினால் இறந்தார்.



**ஏப்ரல் - 14**



அமெரிக்க ஜனாதிபதிகளில் தனிச் சிறப்பு வாய்ந்தவரான ஆபிரகாம் லிங்கன் 1865 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி நாடகம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ஏப்ரல் - 15**

உலகிலேமிகப்பெரிய சொகுசுப் பயணக் கப்பல் என்ற பெருமையோடு தனது கன்னிக் கடற்பயணத்தை ஆரம்பித்த 'டைட்டானிக்' கப்பல் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி பனிப்பாறையில் மோதி மூழ்கியது. இதில் 1,500 பேர் பலியாகினர்.



**ஏப்ரல் - 16**



உலகப் பிரசித்தி பெற்ற நகைச்சுவை நடிகரான சார்லி சப்ளின் 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி லண்டனில் பிறந்தார்.

## கேள்விக்கு என்ன பதில் 20 இன் சரியான விடை

15 குருவிகள்

## கேள்விக்கு என்ன பதில்? - 20- பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - இ.ரஷிதா, பிடாரி அம்மன் வீதி, 8 ஆம் வட்டாரம், நயினாதீவு.

இரண்டாம் பரிசு - இ.செந்தூரன், அரசமர வீதி, தாவடி வடக்கு.

மூன்றாம் பரிசு - அ.அரசகுலசேகரன் டச்சுவீதி, [illegible] வடக்கு, மானிப்பாய்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனிதப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்த பொதுநலவாய நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்

## அந்நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனிதப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்த பொதுநலவாய நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமென பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

மனிதப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்த இரண்டு நாள் யுத்த நிறுத்தம் போதுமானதாக அமையாதென அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த வலயத்தில் சுமார் ஒரு லட்சம் பொதுமக்கள் சிக்கித்தவிப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனிதப் பேரவலம் தொடர்பாகப் பொதுநலவாய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் மௌனம் சாதிக்கக் கூடாதென மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் மாஜா தருவெல்லா தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை இரண்டு தரப்பினரும் துன்புறுத்துவதாகத் தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளதாகவும் இரண்டு தரப்பினரும் ஒருவரை மாறி ஒருவர் குற்றம் சுமத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவிப் பொதுமக்களைப் புலிகள் மனிதக் கேடயமாகப் பயன்படுத்தி வருவதாகவும் அகதிகளை அரசாங்கம் தடுப்பு முகாம்களில் தடுத்துவைத்துள்ளதாகவும் நம்பகத் தகுந்த தகவல்கள் குறிப்பிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் சுயாதீன கண்காணிப்பாளர்களையோ அல்லது ஊடகவியலாளர்களையோ யுத்தப் பிரதேசத்திற்குச் செல்ல அனுமதிப்பதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்களின் பாதுகாப்பு உச்சளவில் உறுதிப்படுத்தப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் எடம்ஸ் தெரிவித்துள்ளார். (50)

# குருநகர் பொதுச் சந்தையில் மலிவான விலையில் கடலுணவுகள்

குருநகர்,ஏப்.16

குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தையில் மாலைநேரங்களில் கடல் உணவு வகைகள் மலிவாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தை நாளாந்தம் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மூடப்படுவதைத் தொடர்ந்து அதன்பின்னர் கடலுணவுகள் இச்சந்தையின் கிழக்குப் புறத்தில் உள்ள வீதியிலேயே வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வியாபாரம் பிற்பகல் 5.30 மணி வரை நடைபெறுகிறது. இதன்போது விற்பனை செய்யப்பட்டுவரும் கடலுணவுகளில் மீன் கிலோ 350 ரூபா முதல் 400 ரூபா வரையும், இறால் கிலோ 300 ரூபா முதல் 350 ரூபாவரையும், கணவாய் கிலோ 250 ரூபா முதல் 300 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவித்தனர். (50-51)

# பெண்மை போற்றப்பட வேண்டியதொன்று

*எங்கெல்லாம் பெண்மை போற்றப்படுகிறதோ, எங்கெல்லாம் பெண்களுக்கு உரிய இடம் அளிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் தன் பல்வகைப் பெருமைகளோடும் தெய்வத்துவம் மிளிர்கின்றது என வேதங்கள் முழங்குகின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக இன்றோ, பெண்களை மதிப்பது மிகவும் தரக்குறைவான செயலாகக் கருதப்படுகிறது. பெண்களை மதிப்பது என்னவோ தேவையற்றதாகவும் சிறுமையானதாகவும் சிலர் நினைக்கின்றனர். ஆனால் இது சரியானதல்ல.*

*வீட்டில் பெண்கள் கிரகலட்சுமியாக மதிக்கப்படுகிறார்கள். அவளே தர்மபத்தினி. அவளே அர்த்தாங்கி (ஆணின் சரிபாதி). தற்போது பத்மஸ்ரீ, பத்மவிபூஷன் பட்டங்களைப் பெறுவதைப் பலர் பெருமையாக நினைக்கிறார்கள். அவைகளெல்லாம் சிறப்பற்றவை.*



*பெண்களுக்கு எல்லாம் நிரந்தரமான பட்டங்கள் தரப்பட்டிருக்கின்றன. பெண்ணில்லாத ஒரு வீடு காட்டிற்குச் சமம். பெண்ணிற்கு உரிய மதிப்பைக் கொடுப்பதும் அவர்களைக் கண்ணீர் சிந்தவிடாமல் நடந்துகொள்வதும் ஆண்களின் முக்கியமான பொறுப்பு. பெண் கண்ணீர் சிந்தும் இல்லம் நிச்சயம் அழிந்துபோகும்.*

*(அருளுரை 19.11.95 பா.அ.வ. ப.59)*

**சுவாமி சிந்தனை**

# முகாம்களில் தங்கவைத்துள்ள பணியாளர்களை விடுவிக்குமாறு அரசிடம் ஐ.நா. சபை கோரிக்கை

மோதல் பிரதேசங்களில் பணியாற்றும் பொருட்டு, தற்காலிக முகாம்களில் அரசாங்கம் தங்கவைத்துள்ள தமது பணியாளர்களை விடுவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது.

தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள தமது பணியாளர்களும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களும் அங்கிருந்து வெளியேற முடியாதுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் விடுவிக்கப்படும் பட்சத்தில், அவர்கள் தமது தொண்டுப் பணிகளைத் தொடரக்கூடுமானதாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் தொண்டு பணியாளர்களின் நடமாடும் சுந்திரத்தினை உறுதி செய்யுமாறு ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபை கோரியிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தை உறுதிசெய்து, பணியாளர்களை விடுவிப்பதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தபோதும் இதுவரையிலும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (50)

# நெதர்லாந்தில் எதிர்வரும் சனியன்று மாபெரும் 'உரிமைக் குரல்' பேரணி

நெதர்லாந்தில் எதிர்வரும் சனிக்கிழமை மாபெரும் 'உரிமைக் குரல்' பேரணி நிகழ்வு நடைபெறவுள்ளது.

டென்காக் பிரதான தொடருந்து நிலையத்தில் இருந்து பிற்பகல் 2 மணியளவில் தொடங்கும் பேரணி நாடாளுமன்றம் வரை செல்லவுள்ளதாக நெதர்லாந்து தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தமிழினப் படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

நிரந்தரமான போர்நிறுத்தம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

அனைத்துலக ஊடகத்துறையினரை வன்னிப் பகுதிக்கு அனுப்பி உண்மை நிலையினை அறிதல் வேண்டும்.

அனைத்துலக தொண்டு நிறுவனங்களை வன்னிப் பகுதிக்கு அனுப்பி மனிதாபிமான உதவிகளை வழங்குதல் வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் நிரந்தர அரசியல் தீர்வுக்காகப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நெதர்லாந்து அரசையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் வலியுறுத்தி இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே எமது தாயகத்தின் இன்றைய அவசரமானதும் அவசியமானதுமான நிலைமையினை உணர்ந்து அனைத்து நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களையும் இதில் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு நெதர்லாந்து தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுக்கொள்கின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு உங்கள் பிரதேச தமிழ் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (50)

# தொண்: .. ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

# ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை; மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.16

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

**வைத்தீஸ்வராக் கல்லூரி**

ஞா.அருணன் - 7ஏசிஎஸ், வி.தினேஸ் - 5ஏ3பி, ர.சுவீதா - 3ஏ2பி3சிஎஸ், செ.செந்திரிகா - 3ஏபி3சி, சி.லாவண்யா - 3ஏபி2சி2எஸ், ஜெ.வானுஜன் - 3ஏபி2சிஎஸ், கா.ஹரிச்சந்திரா - 2ஏ3பி3சிஎஸ், நா.கார்த்திக் - 2ஏ3பி2சி2எஸ், இ.ராம்ஜி - 2ஏ4பிசிஎஸ், க.கண்ணன் - 2ஏ2பி3சிஎஸ், ந.சுபாகரன் - 2ஏபி4சிஎஸ், கு.நிலோஜினி - 2ஏபி4சிஎஸ், தெ.ஜனனி - 2ஏ5சிஎஸ், கோ.நிரோஜன் - 2ஏசி4எஸ்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

பா.ராகினி - 6ஏ2பி, சி.ரவிச்சந்திரன் - 6ஏபிசி, இ.அனோஜா - 5ஏபி2சிஎஸ், ம.கபிரிணி - 5ஏபி2சிஎஸ், ந.தாரணி - 4ஏ3பிசிஎஸ், ம.கோபிகா - 4ஏபி3சி, த.நிதர்சனா - 4ஏ4பி, இ.குவைசிகா - 3ஏபி4சிஎஸ், நா.லாவண்யா - 3ஏ2பிசிஎஸ், யோ.நர்மிதா - 3ஏபி3சிஎஸ், பா.சஞ்சிகா - 3ஏபி3சிஎஸ், நா.தர்சிகா - 3ஏ2பி2சி2எஸ், ஜெ.வித்தியா - 3ஏபி4எஸ்.

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

*தமிழ்மொழி மூலம்*

பவீனா தவபாலன் - 9ஏ, ருத்திரனசாளி விஜயரத்தினம் - 9ஏ, சிந்துஜா விஜயராஜ் - 9ஏ, பைந்தமிழ் சற்குணராஜா - 9ஏ, கார்த்திகா சிறிகாந்திதாசன் - 6ஏ, துவாரகா இராசேந்திரன் - 5ஏ, நிருஷா நவரத்னராஜா - 5ஏ, மேரிதர்ஷா ரெனிஷன் றொபேட் - 5ஏ, லோகிதா கெங்காதரன் - 5ஏ, இந்துஷா சிவபாதம் - 5ஏ, லாவண்யா வரதராஜா - 5ஏ, கார்த்திகா அருணகிரிநாதன் - 5ஏ, அனுஷா ராமச்சந்திரன் - 5ஏ, நிவேதா உதயகுமார் - 4ஏ, கீர்த்தனா ஆனந்தராஜா - 4ஏ, கிரிஷாந்தி தங்கராசா - 4ஏ, அட்சரா லோகநாயகம் - 4ஏ,

மேனகா ஜெயரத்னம் - 4ஏ, இளமதி பற்குணநாதன் - 4ஏ, சிவாஜினி சிவபாலா - 4ஏ, டக்ஷிதா தங்கராசா - 4ஏ, தேனுஷா சிவஞானம் - 4ஏ, சமிந்திரா ஞானசீலன் - 4ஏ, நர்மிதா தேவராசா - 4ஏ, கீர்த்தனா வரதராஜன் - 4ஏ.

*ஆங்கில மொழி மூலம்*

கஜனனி ஏகாந்தசிவம் - 9ஏ, கிருஷ்ணா விவேகானந்தன் - 8ஏ, கீர்த்திகா சிவலோகநாதன் - 8ஏ, துஷாரா தியாகராசா - 7ஏ, நிருதிகா ஜஸ்ரஸ் - 7ஏ, சௌதமினி நடேசபிள்ளை - 5ஏ, நிருஷிகா ரத்னசிங்கம் - 4ஏ, டொபோ தினேஷா ஞானபொன்ராஜா - 4ஏ, ஜெனிபர் டார்சிகா ரவீந்திரன் - 4ஏ, சஞ்சீயா டாவரா ரேய்மன் லோகேந்திரா - 4ஏ.

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதி- 2009 நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.16

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஞ்ஞானம் (தமிழ்மொழி மூலம்), விவசாயம் ஆகிய பாடநெறிகளுக்கான நேர்முகப்பரீட்சை இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திரு. எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான கடிதங்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இக்கடிதங்களை பெற்றுக்கொள்ளாதவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பாட நெறிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

**விஞ்ஞானம்**

ஜி.பிரவீனா (சங்கத்தானை), எஸ்.செல்வராஜா (ஏழாலை மேற்கு), ஏ.ஆஷானி (கொக்குவில் மேற்கு), எம்.தினேஷ் (உரும்பிராய்), எம்.ஒயானா பிரியதர்சினி (யாழ்ப்பாணம்), ரி.கௌரி (பொலிகண்டி), எஸ்.அபிநயா (யாழ்ப்பாணம்), எஸ்.ஜான்சி (சங்கத்தானை), ஏ.சர்மினி (யாழ்ப்பாணம்), என்.தர்மலிங்கம் (அராலி தெற்கு), எஸ்.கோபிநாத் (மானிப்பாய் வடக்கு), ஏ.பிரகாஷ் (உடுவில் கிழக்கு), எஸ்.சிவப்பிரகாசம் (புலோலி மேற்கு), கே.சோபனா (யாழ்ப்பாணம்), ஏ.கேசிகா (யாழ்ப்பாணம்), எஸ்.துவாரகா (மல்லாகம்), எஸ்.பிரசாளினி (சாவகச்சேரி), வி.அபிராமி (மூளாய் கிழக்கு), வை. சயனுதா (யாழ்ப்பாணம்), வி.வினோதீபா (இணுவில் கிழக்கு), வி.நதியா (புலோலி மேற்கு), கே.கார்த்திகா (குடத்தனை), பி.நிருபா (தொண்டைமானாறு), என்.துஷ்யந்தன் (யாழ்ப்பாணம்), ஆர்.கௌசினி (ஊரெழு), எஸ்.சத்தியகேசன் (உரும்பிராய் மேற்கு), ஆர்.கௌசிகா (அரியாலை), எம்.வனிதா (மாதகல்), ஜே.சேந்தன் (புத்தூர்), எஸ்.ரேணுராஜ் (புலோலி தெற்கு), ரி.சிந்துஜா (கோப்பாய்), எம்.பவிதா (கந்தரோடை), எஸ்.தாட்சாயினி (கைதடி), ஏ.சானுஜா (உயரப்புலம்), ரி.றெமினா (சுதுமலை வடக்கு), கே.திலீபன் (சாவகச்சேரி),

எஸ்.ராதிகா (நல்லூர்), எம்.கே.நிஷாந்தினி (உடுவில்), ஆர்.சுகன்யா (யாழ்ப்பாணம்), எம்.எம்.என்.மெனேசியா (யாழ்ப்பாணம்), எஸ்.மேகலா (தெல்லிப்பழை), பி.ஜீவசோதி (புலோலி தெற்கு), ரி.ரி.சரண்ராஜ் (காரைநகர்), ஆர்.வத்சலா (கரணவாய் மத்தி), எஸ்.செல்வராசா (அளவெட்டி தெற்கு), என்.சங்கீதா (புலோலி தெற்கு), கே.ருக்ஷிகா ([illegible]), [illegible]யினி (கோண்டாவில்), ஆர்.பி.சிந்துஜன் (யாழ்ப்பாணம்), பி.கலையரசி (அளவெட்டி), என்.அபிராமி (சுழிபுரம்),

ரி.விஜயபிரகாஸ் (கோண்டாவில் மேற்கு), ரி.மோகனன் (யாழ்ப்பாணம்), ஏ.நிருசன் (வவுனியா), எஸ்.தாரணி (மீசாலை கிழக்கு), ஏ.பிரசாந்தன் (சிறுப்பிட்டி மேற்கு), என்.நிஷாந்தினி (யாழ்ப்பாணம்), எஸ்.கஸ்தூரி (யாழ்ப்பாணம்), பி.கஜிதா (அளவெட்டி தெற்கு), கே.ஜெனரதன் (யாழ்ப்பாணம்), யு.ஜெனாளினி (உரும்பிராய் வடக்கு), பி.சிறிரங்கன் (வட்டுக்கோட்டை), பி.கஜேந்தினி (சுழிபுரம்), ரி.மகிந்தன் (தையிட்டி).

**விவசாயம்**

என்.ஆனந்தராஜா (யாழ்ப்பாணம்), எஸ்.சிவசஜீபன் (அராலி), ரி.கஜரூபன் (அச்சுவேலி), கே.சுகந்தன் (இணுவில்), எம்.நிரோஜன் (கோப்பாய்), ரி.கயூரன் (கந்தரோடை), எம்.காவியராஜன் (கரவெட்டி), ஏ.கிருஸ்ணராஜ் (சங்கானை), என்.ரஜீவன் (கரவெட்டி), யு.ஜெனாளினி (உரும்பிராய்), பி.பாலசுதன் (புத்தூர் கிழக்கு), வி.கஜீந்தன் (கோப்பாய் மத்தி), பி.அகிலன் (இருபாலை), எல்.வினோபா (வவுனியா), ஏ.பிரபாகரன் (உரும்பிராய்), ரி.வாக்சன் (ஏழாலை), எஸ். கோகுலன் (இருபாலை), ஜெ.ஞானசீலி (சிறுப்பிட்டி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில்
## மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

வினாத்தாள் -II நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

01. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்குக.

மழலையின் மொழிகேட்டு
மகிழாத இதயத்தை
மரமென்று நான் சொல்லவா - இல்லை
மலையென்று தான் சொல்லவா:
குழலோடு எழில் யாழின்
குளிர்கான இசையுந்தன்
குரலுக்கும் பின்பல்லவா - துன்பம்.
குறைவிக்கும் தென்பல்லவா?

பாடலடிகளைக்கொண்டு 01-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) இப்பாடலில் உள்ள தன்மை ஒருமைச்சொல் ஒன்று தருக. ..............................

2) இப்பாடலில் வரும் சினைப்பெயர் ஒன்று தருக. ..............................

3) இப்பாடலில் வரும் பெயரெச்சச் சொல் ஒன்று தருக. ..............................

ஒத்த கருத்துச்சொல் தருக.

4) மழலை - .............................. 5) எழில் - ..............................

எதிர்கருத்துச்சொல் தருக.

6) மலை .............................. 7) குளிர் ..............................

8) "மரமென்று" என்பதை பன்மையில் எழுதுக.

..............................................................

9) "மலையென்று என்பதை பிரித்தெழுதுக.

..............................................................

10) "இல்லை" என்பதன் எதிர்மறை யாது?

..............................................................

02. பின்வரும் சொற்களை பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) நன்மை / கொண்டு / தரும் / திருப்திப்படுவது / உள்ளதைக்

..............................................................................................

2) எல்லோரும் / வேண்டும் / வாழ / நாம் / ஒற்றுமையாக

..............................................................................................

03. பின்வரும் பழமொழிகள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.

1) பேராசை பெருநட்டம்

..............................................................................................

2) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

..............................................................................................

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப்பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.


1) நாங்கள் ஒவ்வொரு .............................. மைதானத்திற்குச் செல்வோம்.
(நாளும்/ நாழும்/ நாளும்)

2) கொடிகள் .............................. தண்டினை உடையன.
(நலிந்த/ நளிந்த/ நழிந்த)

3) கடல் .............................. வேகமாக வீசியது.
(அலை/ அளை/ அழை)

05. பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலச்சொற்களை எழுதுக.

1) 2) 3)



.............................. .............................. ..............................

06. பின்வரும் ஆங்கில வசனத்திற்குரிய தமிழ்க்கருதினை எழுதுக.

1) What is Your Name? ..............................
2) Please Standup ..............................
3) Happy NewYear? ..............................

07. பின்வரும் சிங்களச்சொற்களின் கருத்தை தமிழில் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1) ம(ட்)ட வ(த்)துர தென்ன

..............................................................

2) ஒயாகே வயச கீயத?

..............................................................

★ இல. 08 தொடக்கம் 29 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

08. பின்வருவனவற்றுள் ஆணி வேர்த்தாவரம் அல்லாதது எது?
1) வேம்பு. 2) மா. 3) தென்னை. 4) புளி.

09. பிற பிராணிகளில் ஒட்டி வாழும் பிராணி அல்லாதது எது?
1) தெள்ளு. 2) கரப்பான். 3) பேன். 4) உண்ணி.

10. இலங்கையின் விரைவுத்தபால் (Speed Post) கட்டணம் யாது?
1) 5.00 2) 4.50 3) 30.00 4) 60.00

11. இலங்கையை ஆட்சி செய்த அந்நியர் அல்லாதவர் யார்?
1) அமெரிக்கர். 2) பிரித்தானியர். 3) போர்த்துக்கேயர். 4) துட்டகைமுனு.

12. பின்வருவனவற்றுள் தோற்கருவி அல்லாதது எது?
1) மேளம். 2) நாதஸ்வரம். 3) மிருதங்கம். 4) மத்தளம்.

13. இலங்கையின் முதலாவது தலைநகரம் எது?
1) கண்டி. 2) அநுராதபுரம். 3) கொழும்பு. 4) பொலனறுவை.

14. இவ் வீதிச்சமிக்ஞை குறிப்பது,



1) முன்னால் சிறுவர்கள் கடவை.
2) முன்னால் பாதசாரிகள் நடைபாதை.
3) முன்னால் பாதசாரிகள் கடவை.
4) முன்னால் வைத்தியசாலை.

15. ஞாயிற்றுத்தொகுதியில் மிகப்பெரிய கோள் எது?
1) புவி. 2) வெள்ளி. 3) சனி. 4) வியாழன்.

16. இலங்கையில் மாவட்டங்கள் அதிகமாக உள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம். 2) மேல்மாகாணம்.
3) மத்திய மாகாணம். 4) தென்மாகாணம்.

17. இலங்கையின் சர்வதேச விமானநிலையம் எது?
1) இரத்மலானை. 2) பலாலி. 3) கட்டுநாயக்கா. 4) சீனக்குடா.

18. இலங்கைக்கு பண்டைக்காலத்தில் வழங்கப்பட்ட பெயர்களுள் ஒன்று?
1) தமிழ்நாடு. 2) தப்ரபேன். 3) ஈழம். 4) சிலோன்.

19. தாவரங்களில் ஒளித்தொகுப்பு செயற்பாடு நடைபெறாத வேளை (இரவு) அவை உள்ளெடுக்கும் வாயு எது?
1) ஒட்சிசன். 2) காபனீரொட்சைட். 3) நைதரசன். 4) ஆகன்.

20. இக்குறியீடு பொதிகளின் உறைகளில் குறிக்கப்படுவதன் கருத்து யாது?



1) பொதியினுள் வெட்டும் கருவி உள்ளது.
2) பொதியை வெட்டுதல் கூடாது.
3) பொதி உறையை இவ்வழியே வெட்டுதல் வேண்டும்.
4) பொதியை கவனமாகப் பிரிக்கவும்.

21. நீர் கொதிக்க வைக்கும் பாத்திரங்களின் உள்ளே வெள்ளை நிறத்தில் படிந்திருப்பது எது?
1) உப்பு. 2) கல்சியம். 3) வெண்மண். 4) பாத்திரத்தின் துகள்கள்.

22. இலங்கையில் நாணயங்களை அச்சிட்டு வெளியிடும் அதிகாரத்தைக் கொண்டது எது?
1) ஆட்பதிவுத்திணைக்களம். 2) பொலிஸ் திணைக்களம்.
3) மத்திய வங்கி. 4) சுங்கத்திணைக்களம்.

23. பலகையில் குழி வெட்டுவதற்கு பொருத்தமான உபகரணம் எது?

1) 2) 3) 4)



24. பின்வருவனவற்றுள் சுவாச உறுப்புக்கள் கூடிய பிராணி எது?

1) 2) 3) 4)



25. பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தம் அல்லாதது எது?
1) புவி நடுக்கம். 2) எரிமலை.
3) மின்சாரம் தாக்குதல். 4) வெள்ளப்பெருக்கு.

26. பின்வருவனவற்றுள் கட்புல தகவல் தொடர்புச்சாதனம் எது?
1) தொலைபேசி. 2) வானொலி. 3) பத்திரிகை. 4) ஒலிபெருக்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. கிராமியப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் அல்லாதது எது?
1) அருவி வெட்டுதல். 2) சேனை காத்தல்.
3) படித்தல். 4) தோணி ஓட்டுதல்.


28. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டு எது?

1) 
2) 
3) 
4) 

29. பின்வருவனவற்றுள் கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி எது?

1) 
2) 
3) 
4) 

★ கீழே தரப்பட்டுள்ள உபகரணங்களின் பெயர்களை எழுதுக.

30. 
31. 
32. 
33. 

★ பின்வரும் தாவரங்களின் பெயர்களை தெரிவு செய்து எழுதுக.
( காளான், வல்லாரை, கண்டங்கத்தரி, வெற்றிலை)

34. 
35. 
36. 
37. 

38. ஒரு கூடையில் 240 மாபிள்கள் இருந்தன. அவற்றை ஐந்து மாணவரிடையே சமனாகப் பங்கிட்டால் ஒரு மாணவனுக்கு கிடைக்கும் மாபிள்களின் எண்ணிக்கை யாது?

.....................................................

39. 4kg நிறையுடைய சீனியினை எத்தனை 250g சரைகளாகக் கட்டலாம்?

.....................................................

40. நீர்த்தாங்கி ஒன்றில் இருந்து 47*l* நீர் வெளியேற்றப்பட்ட பின்னர் அத்தாங்கியில் 34*l* 350m*l* நீர் எஞ்சி இருந்தது. எனின், ஆரம்பத்தில் நீர்த்தாங்கியில் இருந்த நீரின் அளவு யாது?

.....................................................

41. வெற்று அடைப்பினுள் வரவேண்டிய இலக்கங்களை எழுதுக.

.....................................................


| | | |
|---|---|---|
| 7 | ☐ | 7 |
| - ☐ | 7 | ☐ |
| 2 | 4 | 5 |

42. 1kg சீனி 70 ரூபா எனின், 3 1/2kg சீனியின் விலை யாது?

.....................................................

43. படத்தில் cm அளவு கோலின்படி பென்சிலின் நீளம் யாது?

.....................................................





44. மு.ப 8.30இற்கு வேலைத்தளத்திற்குச் செல்லவேண்டிய ஒருவர் 35 நிமிடங்கள் பிந்தி வேலைக்குச் சென்றார். எனின், அவர் சென்ற நேரம் யாது?

.....................................................

45. இவ் உருவின் சுற்றளவு யாது?


.....................................................




46. பாடசாலை ஒன்றில் இருந்த 70 மாணவர்களில் 2/5 பங்கினர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தனர். எனின், சித்தி அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....................................................

47. இத்தள உருவில் ஆக்கக்கூடிய சமச்சீர் கோடுகள் அனைத்தையும் வரைந்து காட்டுக.



48. வீதியால் சென்ற வாகனங்களின் எண்ணிக்கைகள் கீழ்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

1) வீதியால் சென்ற பஸ்களினதும் கார்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

.....................................................

2) கார்களின் எண்ணிக்கையினை விட கூடுதலாகச் சென்ற துவிச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது?

.....................................................


3) கார் ஒன்றில் சராசரியாக 7 பேர் பயணம் செய்தனர். எனின், காரில் பயணம் செய்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....................................................

4) வீதியால் சென்ற லொறிகளின் எண்ணிக்கை 16 எனின், அதனை வரைபில் வரைந்து காட்டுக.

5) வீதியால் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....................................................




49. நீர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் என்ற தலைப்பிற்குப் பொருத்தமான எழுவாய் பயனிலை கொண்ட நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் எழுதுக.

.....................................................

.....................................................

.....................................................

.....................................................

.....................................................

.....................................................

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 11 இன்பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## தயார்படுத்தல் பரீட்சை -10, பகுதி-1 இன் விடைக்குறிப்புகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 - 3 | 02 - 2 | 03 - 2 | 04 - 1 | 05 - 1 | 06 - 2 | 07 - 4 | 08 - 3 | 09 - 2 | 10 - 3 |
| 11 - 2 | 12 - 3 | 13 - 3 | 14 - 1 | 15 - 3 | 16 - 3 | 17 - 1 | 18 - 3 | 19 - 4 | 20 - 4 |
| 21 - 2 | 22 - 2 | 23 - 4 | 24 - 2 | 25 - 3 | 26 - 3 | 27 - 3 | 28 - 2 | 29 - 3 | 30 - 2 |
| 31 - 2 | 32 - 3 | 33 - 4 | 34 - 3 | 35 - 4 | 36 - 4 | 37 - 3 | 38 - 2 | 39 - 2 | 40 - 4 |

(2 1/2 × 40 = 100 புள்ளிகள்)

எதிர்வரும் வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட பிரபல ஆசிரியர் திரு.யு.எல்.எம்.சாஜித் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-1 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச் சுடர் அறியத்தருகின்றது.

ஆக்கம்:-ஆசிரியர் எஸ்.தீபன்,
பூந்தோட்டம் மகாவித்தியாலயம்
வவுனியா.

கல்விச்சுடர் தொடர்பான
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும்
தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
021-2229944 / 071-6850005 / 071-4273035.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இருபத்தோராம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 04 . 11 . 1942



உதிர்வு 16 . 04 . 1988

### அமரர் கணபதி வைத்திலிங்கம்

( வைத்தியசாலை முன்னாள் ஊழியர்- நயினாதீவு)

ஆண்டுகள் இருபத்துஒன்று சென்றாலும்
மாண்டதுயர் மாறவில்லை, அன்பினால் எம்மை யாண்டு
கல்வி, உலக அனுபவம் நல்கி
எம்மை சிறக்க வைத்தீர்!
என்றும் விண்ணில் இருந்து நிறைவான ஆசிகளைத் தர
இறைஞ்சுகின்றோம் இறைவன் தாளை.

மனைவி- பார்வதி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(84394)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 03 . 09 . 1929



ஆண்டவன் அடியில் 27 . 04 . 2008

### அமரர் இராசரெட்ணம் நவரட்ணம்

[இலங்கை போக்குவரத்துச் சபை ஓய்வுபெற்ற விநியோக உத்தியோகத்தர்]
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை
திதி: சஸ்தமி (16.04.2009)

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் அன்பு முகம் எங்கள் கண்களில்
பிரகாசித்துக் கொண்டேயிருக்கிறது....
எம் அனைவருக்கும் அன்பால் வழிகாட்டி
சேவையால் உயர்ந்து நின்ற எங்கள் அன்புத் தெய்வமே...
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் அகலாது...
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

0771359789. (தி/557807)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### பொன்னுக்கண்டு சந்திரலிங்கம்

(கட்டட நிர்மாணி)

அன்னை மடியில்: 17.04.1949 இறைவன் அடியில்: 15.03.2009

நிலத்தில் வற்றாத நதியாக எங்கள் மனதில் குறையாத நினைவாக நீங்கள்....

15.03.2009 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், பற்பல உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (16.04.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''பழமுதிர்ச் சோலை'',
தம்பசிட்டி,பருத்தித்துறை. (84425)

குடும்பத்தினர்.

# கள்ளநோட்டு அடித்து வந்த ஆசிரியர்கள் இரத்தினபுரியில் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 16

இரத்தினபுரிப் பகுதியில் இயங்கிவந்த கள்ளநோட்டு அச்சிடும் நிலையம் ஒன்று பொலிஸாரிடம் சிக்கியிருக்கிறது.

அந்தப் பகுதியில் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த நிலையம் சிக்கியது என்றும் இதன்போது அந்த நிலையத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆசிரியர் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கைது செய்யப்பட்ட நபர்களிடம் 75 ஆயிரம் கள்ள நோட்டுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் கூறப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் நுகேகொடைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், மற்றையவர் பொறலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (த)

## தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும்

நல்லூர், ஏப்.15

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை முதல் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இரண்டு தினங்கள் நடைபெறும்.

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் யாழ்.இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியை யாழ்ப்பாணம் அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உட்பட பலர் கலந்துகொள்வார்கள். (50-111)

## மானிப்பாய் பிரதேச சபை ஆதன வரி வீதம் அதிகரிப்பு

மானிப்பாய், ஏப்.16

மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய உப அலுவலகங்களின் கீழுள்ள ஆதனங்களின் ஆதன வரிகள் அவற்றின் பெறுமதிக்கேற்ப 01.01.2009 முதல் 10% வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தங்கள் ஆதனவரி நிலுவைகளை செலுத்தாதவர்கள் தங்கள் பகுதி உபஅலுவலக பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வரிகளைச் செலுத்தி ஒத்துழைக்குமாறும் இது பிரதேசத்தின் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல உதவியாக இருக்குமென்றும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (50)

## வல்வெட்டித்துறையில் மூத்த பிரஜைகள் அவை

கரவெட்டி, ஏப்.16

வல்வெட்டித்துறை மூத்த பிரஜைகள் அவை அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வல்லை அ.மி.த.க.பாடசாலை பொதுமண்டபத்தில் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றச் செயலாளர் கு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சமூக நல திணைக்களத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரி.கிருபாகரன், பருத்தித்துறைப் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சுரேந்திரா, பருத்தித்துறைப் பிரதேச செயலக உள வள உதவியாளர் ரி.துஷ்யந்தன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்வில் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் தவறாது சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-70)

## வடமராட்சியில் மரம் நடுகை விழா

கரவெட்டி, ஏப்.16

வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் திக்கம் வடிசாலையும் இணைந்து நடத்தும் மரம்நடுகை விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திக்கம் வடிசாலையில் நடைபெறும்.

கொத்தணித் தலைவர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மதுவரி அதிகாரி என்.சோதிநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி இ.விஜயமோகராஜன், அல்வாய் மேற்கு கிராம சேவை அலுவலர் ரி.ரங்கநாதன், திக்கம் வடிசாலை மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரி ஜி. [illegible] ஆகியோர் கலந்து கொள்வர். (50-70)

## சுஜீவா வைத்தியசாலை அறிவித்தல்


25ஆவது அனுராதபுர பாரம்பரிய களத்தாவ, பாலிநகர் மற்றும் காரைநகரில் முன்னர் கிளைகளைக் கொண்டிருந்த பக்கவிளைவில்லாத இந்திய, இலங்கை சித்த ஆயுள்வேத தமிழரச பாரம்பரிய சுதேச மருத்துவ முறைகள் மூலம் தீராத நோய்களை நீக்குவதிலும் விசேடமாக குழந்தையின்மை சிகிச்சையில் பிரபலமானதுமான சுஜீவா வைத்தியசாலை தற்போது இல.6, கலட்டி அம்மன் கோயில் வீதி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (தட்டாதெருச் சந்திக்கு அருகில்) எனும் முகவரியில் மட்டுமே இயங்கிவருகிறது.

★ பொறுப்பு வைத்தியர்: திருமதி ச.ஜெயலன் DA.,M.RIMP.,
★ ஏனைய வைத்தியர்கள்: K.O. இராஜரட்ணம், ஜெ.ஜெயலன்
★ பார்வையிடும் நேரம்: காலை 6.00-11.00 தொ.பே.: 0775594147
மாலை 3.00- 6.00 தொ.பே.: 0772487044
★வெள்ளிக்கிழமை விடுமுறையாகும்.

குறிப்பு: குழந்தையின்மை சிகிச்சை பெற வருபவர்கள் தயவுசெய்து காலையில் வரவும்.

(சி/557879) Dr.ஜெ.ஜெயலன்.

## 108ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சிவசுப்பிரமணியம் சிவநேசன்

மலர்வு: 14.05.1963 உதிர்வு: 21.10.2008

கடந்த21.10.2008 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.04.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய். (84416)

சிவசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருணாசலம் வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்- யா/மந்துவில் ஸ்ரீபார்வதி வித்தி., யா/நாவற்காடு கணபதி வித்தி. )



உசனைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் வேலுப்பிள்ளை நேற்று (15.04.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் அன்னலட்சுமியின் (தங்கம்மா) அன்புக் கணவரும் கமலாதேவியின் அன்புச் சகோதரனும் பிரபாகரன் (லண்டன்), பிரதீபன் (லண்டன்), காலஞ்சென்ற குமுதினி, நிரூசன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சுபாசினி (லண்டன்), தாரகா (கொழும்பு) ஆகியோரின் மாமனும் தீபிகா, ஹர்ணி ஆகியோரின் பாசமிகு பேரனும் கார்த்திகேசு, இராமநாதன், காலஞ்சென்ற கிருஸ்ணநாதன், சந்திரநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.04.2009) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சியாமளா மில் ஒழுங்கை,
மீசாலை வடக்கு,
மீசாலை. (84426)

தகவல்:
மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக வலயத் தடகளப் போட்டிகளில் ஊர்காவற்றுறை அந்தோனியார் முதலிடம்

வலி.வடக்கு,ஏப்.16

தீவகக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தீவகக் கல்வி வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இக்கல்லூரி, நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 22 முதலாம் இடங்களையும், 24 இரண்டாம் இடங்களையும், 12 மூன்றாம் இடங்களையும் பெற்று 206 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

**13 வயதுப் பிரிவு**

க.இராஜ்குமார் - 1ஆம் இடம், நீளம் பாய்தல்,

ம.கௌசிகன் - 2ஆம் இடம், நீளம் பாய்தல்.

4x100 மீற்றர் அஞ்சலோட்டம், 2ஆம் இடம்.

**15 வயதுப் பிரிவு**

அ.அன்ரனி அலெக்ஸ்-100 மீற்றர், 200 மீற்றர் 1ஆம் இடம், நீளம் பாய்தல் 2ஆம் இடம்.

மு.பேட் நியாந் - 400 மீற்றர் 1ஆம் இடம், 100 மீற்றர், 200 மீற்றர் 2ஆம் இடம்.

ஜெ.குருபரன் - குண்டு போடுதல் 2ஆம் இடம், 400 மீற்றர், தட்டெறிதல், 3ஆம் இடம்.

அ.அல்பிரட் யூட்சன் - தட்டெறிதல், 2ஆம் இடம்,

டெ.பிரசாந் - ஈட்டியெறிதல் 1ஆம் இடம்.

கி.கிறிஸ்தரன் - ஈட்டியெறிதல் 3ஆம் இடம்.

4x400 மீற்றர் அஞ்சலோட்டம், 1ஆம் இடம், 4x100 மீற்றர் அஞ்சலோட்டம், 2ஆம் இடம்.

**17 வயதுப் பிரிவு**

ப.சிவதீபன்- உயரம் பாய்தல் 1ஆம் இடம், முப்பாய்ச்சல் 2ஆம் இடம், நீளம் பாய்தல் 3ஆம் இடம்.

நி.தினேஷ் - தட்டெறிதல் 2ஆம் இடம், முப்பாய்ச்சல் 3ஆம் இடம்.

4x100 மீற்றர் அஞ்சலோட்டம் 1ஆம் இடம்.

4x400 மீற்றர் அஞ்சலோட்டம் 2ஆம் இடம்.

**19வயதுப் பிரிவு**

இ.அமலதாஸ் - 100 மீற்றர் 2ஆம் இடம்.

அ.டொமின்கோ - உயரம் பாய்தல், நீளம் பாய்தல் 1ஆம் இடம், முப்பாய்ச்சல் 2ஆம் இடம்.

அ.அலெக்ஸ்- தட்டெறிதல் 2ஆம் இடம்.

ஜீ.பகீரதன் - 5000 மீற்றர் ஓட்டம் 3ஆம் இடம்.

4x100 மீற்றர், 4x400 மீற்றர் அஞ்சலோட்டம் 1ஆம் இடம்.

**21 வயதுப் பிரிவு**

மு.ஆல்தோ - 100 மீற்றர் 1ஆம் இடம், 200 மீற்றர், 400 மீற்றர் 2ஆம் இடம்.

செ.ஜெபநேசன் - நீளம் பாய்தல் 2ஆம் இடம், 400 மீற்றர் முப்பாய்ச்சல் 3ஆம் இடம்.

மா.தினேஷ் - 800 மீற்றர், 1500 மீற்றர், 5000 மீற்றர் 1ஆம் இடம்.

தே.யூலிடெனிஸ் - நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் 1ஆம் இடம்.

எஸ்.வினோத் - குண்டு போடுதல் 3ஆம் இடம்.

அ.அன்றோ யோசப்பின் - தட்டெறிதல் 3ஆம் இடம்.

4x100 மீற்றர், 4x400 மீற்றர் அஞ்சலோட்டம் 1ஆம் இடம்.

**19 வயதுப் பிரிவு பெண்**

யூ.விஜிதா - 100 மீற்றர், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் 1ஆம் இடம்.

ரி.தபோஜினி - முப்பாய்ச்சல் 2ஆம் இடம்.

**21 வயதுப் பிரிவு பெண்**

சி.நிவேதினி - நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், ஈட்டியெறிதல் - 3ஆம் இடம்.

அ.மேரிசோபா - குண்டுபோடுதல் 2ஆம் இடம்.

4x100 அஞ்சலோட்டம் 3ஆம் இடம். (4-86)

## எல்லே போட்டிகள் 25ஆம், 26ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.16

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கிடையே நடத்தும் எல்லே விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான எல்லே போட்டிகள் 25ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலும், பெண்களுக்கான எல்லே போட்டிகள் 26ஆம் திகதி புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெறும் என யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (50)

## சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் சம்பியனாகியது மூளாய் விக்ரோறி வி.க.




சங்கானைப் பிரதேச செயலகத்தால் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வின் இறுதிப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் திருமதி பாபு தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியின் பிரதம விருந்தினராக மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ரூபசிங்கம் கலந்துகொண்டார்.

இப்போட்டிகளில் 99 புள்ளிகளைப் பெற்று மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் சங்கானைப் பிரதேச செயலகச் சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது. கடந்த ஒரு மாதமாக நடத்தப்பட்டு வந்த பிரதேச செயலகப் போட்டிகளில் எல்லே, கரப்பந்தாட்டம், கிரிக்கெட் போட்டிகளில் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழகம் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருட விளையாட்டு நிகழ்வில் 2ஆம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகமும், 3ஆம் இடத்தை அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை இம்மாத இறுதியில்

வலி.வடக்கு,ஏப்.16

கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே பெறப்பட்ட நிலையில் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

பரீட்சைக்குப் புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் ந.சுரேஸ்குமாருடன் அல்லது தலைவர் மனோகரனுடன் உடன் தொடர்புகொள்ளுமாறும் விண்ணப்பங்களை ந.சுரேஸ்குமார், செயலாளர், கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அராலி வீதி, சங்கானை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-86)

## யாழ்.வலய எல்லே போட்டியில் மத்திய கல்லூரி சம்பியனானது

வலி.வடக்கு,ஏப்.16

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் அனைத்து வீரர்களும் ஆட்டமிழந்து ஓர் ஓட்டத்தை மட்டுமே பெற்றுக்கொண்டார்கள்.

இரண்டு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி விளையாடிய யாழ்.மத்திய கல்லூரி எட்டு வீரர்கள் ஆட்டமிழந்த நிலையில் இரண்டு ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. ஜெனோசன், கஜன்ராஜ் ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்று வெற்றிக்கு வழி சமைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். (4-86)

## குழுநிலை விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பம்

வலி.வடக்கு, ஏப்.16

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான குழுநிலை விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

குழுநிலைப் போட்டிகள் அனைத்திலும் கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, பிரதேச செயலக அணிகளுடன் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளும் கலந்துகொள்ளவுள்ளன.

எல்லே (ஆண், பெண்), கரப்பந்தாட்டம் (ஆண், பெண்), உதைபந்தாட்டம் (ஆண், பெண்), மென்பந்துத் துடுப்பாட்டம் (ஆண், பெண்) மற்றும் வலைப்பந்தாட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

விருப்பத்துக்குரிய போட்டிகளான கூடைப்பந்தாட்டம், ஹொக்கி, மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் என்பன ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-86)

## பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியனானது காங்கேசன்துறை ஐக்கிய வி.க.

வலி.வடக்கு,ஏப்.16

ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகம் பிரதீப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் சங்கானை விளையாட்டுக் கழகமும், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை ஐக்கிய விளையாட்டுக் கழகம் தன்வசமாக்கியது.

முதல் இரண்டு சுற்றுக்களையும் முறையே 25:13, 25:12 புள்ளிகள் என்ற அடிப் படையில் சங்கானை விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது. (04-86)

## கிரிக்கெட் ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஏப்.16

கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குக் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வண்ணார்பண்ணை காமாட்சியம்பாள் விளையாட்டுக்கழகம்

நண்பகல் மற்றுமொரு போட்டியும் நடைபெறவுள்ளது. (4-86)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகளை முதலாவது படத்திலும், முதல் தடவையாகக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வீராங்கனைகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழாக் காணும்
## தும்பளை மேற்கு சன சமூக நிலையம்
பருத்தித்துறை

ஸ்தாபிதம்- 16.04.1949

வரத விநாயகரின் வற்றாத கருணையினால்
வைரக்கல்லினைப் போல் வையகத்தில் ஒளிவீசி
மல்லிகைப் பூவினைப் போல் தும்பளையில் பரிமளித்து
அறிவுப் பொக்கிசமாய் அரும்பணிகள் பல புரிந்து
கலங்கரை விளக்கினைப் போல் காலமெல்லாம் வழிகாட்டி
சனசமூக சேவையுடன் சாதனைகள் செய்துயர்ந்து
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

செல்வி ஏ.வரலட்சுமி.

தும்பளையின் மேற்குப் பகுதியில் தும்பளை மேற்கு சனசமூக நிலையம் என்ற பெயரில் இயங்கி வருகின்ற நூலகம் 1949ஆம் ஆண்டு வரத விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள ஒரு தற்காலிக கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று (16.04.2009) வைரவிழா காண்கின்றது.

அன்றிலிருந்து இன்றுவரை நாளேடுகளும், சஞ்சிகைகளும் பொது மக்களின் பாவனைக்காக விடப்படுகின்றன. 60 ஆண்டுகள் அகவையுடைய இந்நூலகம் சொந்த கட்டடம் இல்லாமையினால் தும்பளை மேற்கில் உள்ள பல வீடுகளில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

1959 இல் திரு.க.சுப்பிரமணியம் (R.P.M.) அவர்களால் வரத விநாயகர் ஆலய முன்றலில் உள்ள ஒரு காணியில் இந்நிலையத்திற்கென ஒரு கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இக்கட்டடம் கால ஓட்டத்தால் சேதமுற்றபோது எம் ஊர் மக்களால் திருத்தம் செய்யப்பட்ட போதும், தற்போது பாவனைக்கு உதவாத நிலையிலேயே இக்கட்டடம் உள்ளது. இதனால் தற்பொழுது திருமதி பகவதி கணேசன் அவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

நீண்டகாலமாக இந்நிலையத்திற்கென சொந்தக் காணி ஒன்று இல்லாமல் இருந்து வந்தது. இக்குறையைத் தீர்க்க கனடாவில் வசிக்கும் இவ்வூர்வாசியான திருமதி பவானி தர்மலிங்கம் அவர்களால் காணி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மாணவர்களின் கல்வித் தேவைக்காகவும், முன்பள்ளி, கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் மாதர்சங்கம் போன்றவற்றுக்கென இந்நிலையத்திற்கு கட்டடம் ஒன்று தேவையாக உள்ளது. இதனை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் மற்றும் சமூக ஆர்வலர்களும் கவனத்திற்கொண்டு ஆவன செய்து தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கு.பஞ்சாட்சரம்
(நில அளவையாளர்).

(சி/558084)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 30.04.1930

விண்ணுலகில் 27.04.2008

திருமதி
## அன்னப்பிள்ளை மயில்வாகனம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/வீரசிங்கம் ம.வி.)

திதி: ஸப்தமி (16.04.2009)

**எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்னையே!**

அன்பென்ற சொல்லின் உயர்வை உணர்த்தி
ஆசிரியப் பணியின் சிறப்பினை உயர்த்தி
இல்லற வாழ்வில் இறையன்பை புகட்டி
ஈசன் பாதம் சேர்ந்த உங்களை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் நாம் போற்றிப் பணிந்து
எல்லாம் வல்ல தட்டாங்குள விநாயகனை
வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மீசாலை கிழக்கு,
மீசாலை.

பிள்ளைகள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(84382)

# வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
## பாடசாலை வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்- 2009

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இக்ராட் (ICTAD) இல் பதிவுசெய்து பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 17.04.2009 முதல் 29.04.2009 நண்பகல் 12.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 30.04.2009 முற்பகல் 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 30.04.2009 முற்பகல் 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. இல.04, 05, 06 ஆகிய வேலைகளுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் விண்ணப்பிக்கலாம்.
05. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை, **பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினைப் பெறுதல் வேண்டும்.
07. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்ட ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும்.
08. கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இந் நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப்பணம், மீளளிக்கப்படாத வைப்புப்பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
09. தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 06 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|
| 01. | யா/மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம்- தொடர் வேலை (மேல் தளம்) 50' X 25' | 750.00 | 20,000.00 | M7/C8 |
| 02. | யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி. இருமாடிக் கட்டட க.பொ.த. (சா/த) விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாணம்- (கீழ்த்தளம்). 40'X 25' | 750.00 | 20,000.00 | M7/C8 |
| 03 | யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி. இருமாடி கட்டட க.பொ.த (சா/த) விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாணம்- (கீழ்த்தளம்). 40'X25' | 750.00 | 28,600.00 | M7/C8 |
| 04 | யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பா. கணனி அறை கட்டடத் திருத்தம் 20'X 20' | 250.00 | 750.00 | M9/C10 |
| 05 | யா/தாவடி இ.த.க.பாடசாலை. கணனி அறை கட்டடத் திருத்தம் 20'X 20' | 250.00 | 750.00 | M9/C10 |
| 06. | யா/வட்டு மத்திய கல்லூரி. ஆரம்பப்பிரிவு பிரதான மண்டபம் திருத்தம் | 500.00 | 5,000.00 | M9/C10 |
| 07. | யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பிரதான மண்டபம் திருத்தம். | 500.00 | 17,000.00 | M8/C9 |
| 08. | யா/மாதகல் ஜோசப் ம.வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் (கீழ்த்தளம்).90'X 25' | 750.00 | 30,400.00 | M7/C8 |
| 09. | யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பா. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம்- தொடர் வேலை (கீழ்தளம்). 110'X 25' | 750.00 | 36,000.00 | M7/C8 |
| 10. | யா/மல்லாகம் கனிஷ்ட வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம்- (கீழ்த்தளம்). 100'X 25' | 750.00 | 22,500.00 | M7/C8 |
| 11 | யா/ ஏழாலை மகா வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட க.பொ.த. (சா/த) விஞ்ஞான ஆய்வு கூட நிர்மாணம் - (கீழ்த்தளம்) 50'X 25' | 750.00 | 27,000.00 | M7/C8 |

பாடசாலை வேலைப்பகுதி,
வலிகாமம் வலயம்.

ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்.

(சி/5580090)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை சிறையில் 6 கைதிகள் காவலர்களால் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஏப்ரல் 16

களுத்துறைச் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல முயன்றனர் என்று கூறப்படும் கைதிகள் மீது சிறைச்சாலைக் காவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அறுவர் உயிரிழந்தனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் வஜிர விஜயகுணவர்த்தன தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் நாகொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கொலை, கொள்ளைச் சம்பவம், பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டடிருந்தவர்களே இவ்வாறு தப்பிச் செல்ல முற்பட்டனர் என சிறைச்சாலை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

''இச்சம்பவத்தில் 11 கைதிகள் தப்பிச்செல்ல முயன்றனர். அவர்களில் 6 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இன்னொருவர் சரணடைந்தார்'' என களுத்துறைப் பொலிஸார் கூறினர்.

சிறைச்சாலைக் கம்பிகளை இரும்பு துண்டைப் பயன்படுத்தி வெட்டிக்கொண்டு தப்பிச் செல்ல முயன்ற வேளையிலேயே கடமையில் இருந்த காவலர்கள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன்போதே இவர்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

(சி)

# கிழக்கு, ஊவா மாகாணங்களின் சில பகுதிகளில் நேற்றுக் காலை சிறிய அளவிலான நில அதிர்வு

கொழும்பு, ஏப்.16

அம்பாறை மாவட்ட பாணம முதல் மாத்தறை வரையும் ஊவா மாகாணத்தின் கிழக்கு மற்றும் தென்பகுதிகளிலும் பல பிரதேசங்களிலும் நேற்றுக்காலை நில அதிர்வு உணரப்பட்டது எனப் புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை 8.50இற்கும் 8.52இற்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்த நில அதிர்வு உணரப்பட்டது எனப் பணியகத்தின் பணிப்பாளர் கலாநிதி கித்சிறி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி பள்லேகலயில் உள்ள பூமி அதிர்வு கண்காணிப்பு மையத்தில் இந்த நில அதிர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார்.

இந்த நில அதிர்வின் அளவு தொடர்பில் இதுவரை சரியான தகவல்கள் வெளியாகாத போதிலும் 2 தொடக்கம் 5 விநாடிகளில் உணரப்பட்ட இந்த நில அதிர்வினால் பாணம, கதிர்காமம் பகுதிகளில் சில வீடுகள் சிறிய சேதங்களுக்கு உள்ளாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை நகர்,பொத்துவில், பாணம, திருக்கோவில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, நிந்தவூர், கல்முனை ஆகிய கரையோரப் பகுதிகளிலும் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரப் பகுதி உட்பட ஆரையம்பதி, காத்தான்குடி, ஏறாவூர், கல்லடி, ஆகிய பகுதிகளிலும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. பதுளையிலும் இந்த நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கல்முனைப் பிரதேசத்தில் வீட்டுக்குள் இருந்தவர்கள் தாம் அமர்ந்திருந்த கதிரைகள் ஆடுவதை உணர்ந்து அலறி அடித்துக்கொண்டு வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளில் வந்துநின்றனர். கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வார்ட்டிலிருந்து சிகிச்சைபெற்றுவந்தவர்களும், வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெறவந்தவர்களும், வைத்தியசாலைக் கட்டடங்களை விட்டு வெளியேறி நீண்ட நேரமாக வைத்தியசாலை முற்றத்தில் நின்றனர்.

மருதமுனை,கல்முனைக்குடி போன்ற இடங்களில் அலுமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள் நில நடுக்கத்தால் கீழே விழுந்தன எனவும் கூறப்படுகின்றது.

மிகவும் சிறிய அளவில் இரண்டு தடவைகள் தொடர்ச்சியாக இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

(அ-சி)


## அதிர்ஷ்ட வினா சீட்டிழுப்பு முடிவுகள்
**VILLAGE 2 CITY CLUB** Thevaraiyali, Jaffna.

முதலாம் பரிசு சீட்டு இல: 429
2 ஆம் பரிசு சீட்டு இல: 1589
3 ஆம் பரிசு சீட்டு இல: 1020
ஆறுதல் பரிசுகள் சீட்டு இல: 3472, 1464, 2935, 3086, 2895.

தொடர்பு இல: 0778331202



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால்
மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும்

மகளிர் அபிவிருத்தி நிலைய
**தையல், மனையியல்**
**கண்காட்சியும் விற்பனையும் 2009**

ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை

இடம்: யாழ்.இந்துக் கல்லூரி
நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**கிராம அபிவிருத்தித் திணைக்களம்**
**யாழ். மாவட்டம்.**


## மரண அறிவித்தல்

### திருமதி அரியமலர் பங்கிராஸ்



தெல்லிப்பழை, பாவலர் துரையப்பா வீதியைப் பிறப்பிடமாகவும் RTAS ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் பங்கிராஸ் நேற்று (15.04. 2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை பங்கிராஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குருநாதி- சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும், ஜெயமலர், துரைரட்ணம் (ஊழியர்,சிமெந்துக்கூட்டுத்தாபனம்),யோசியா நேரு (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஆபிரகாம்லிங்கன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அல்பிரட் (ஆங்கில ஆசிரியர்), கமலாவதி, ரூத்பாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாத், ஆபிரகாம்லிங்கன் (மாணவர்கள், யாழ்.மத்திய கல்லூரி), நிக்கோலா, கெவின் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, சதாசிவம், நடராசா, இராசமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் நாளை (17.04.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

RTAS Lane,
Kondavil East,
Kondavil.

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கிணற்றில் வீழ்ந்து 7 வயதுச் சிறுமி மரணம்

சாவகச்சேரி, ஏப்.16

பொதுக்கிணறு ஒன்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த சிறுமி ஒருவர், கிணற்றினுள் விழுந்து மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் நுணாவிலில் நேற்று பி.ப. 4 மணியளவில் நிகழ்ந்தது. அதே இடத்தைச் சேர்ந்த உதயகுமார் அமிஸ்த்தா (வய்து - 7) என்னும் சிறுமியே மரணமானவராவார்.

சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ-07-78)

# வெளி இணைப்பு இயந்திரம் பூட்டி மீன் பிடிப்பதற்கு நேற்றுமுதல் தடை

வண்ணை, ஏப்.16

யாழ். குடாக்கடலில் நேற்று புதன்கிழமை மீன்பிடி வள்ளங்களில் வெளி இணைப்பு இயந்திரங்கள் பூட்டிச் செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை .

இந்நிலை மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை நீடிக்குமென படையினர் தெரி வித்ததாக கடற்றொழிலாளர்கள்கூறினர்.

எவ்வாறாயினும் பாய் வள்ளங்களில் சென்று மீன் பிடிப்பதற்கு படையினர் தடை விதிக்கவில்லை.

கடற்றொழிலாளர்கள் பாய் வள்ளங்களில் நேற்றும் மீன்பிடிக்கச் சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-160)


சென்.அன்ரனிஸ் கணனி அறிவுசார் கல்வியகம்.
**St.Antony's Computer Literacy Academy**
St.Antony's Church, 4th Cross Street, Point Pedro.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I 18.04.2009 பிரிவு II 25.04.2009

- Diploma in Ms Office (2007).
- Diploma in Desk Top Publishing.
- Diploma in Accounting Packages.
- Diploma in Hardware Technology.
- Certificate in Kid Wizard Program

G.C.E. (O/L) மாணவர்களிற்கான ICT பாடநெறிக்கான வரையறை யற்ற செய்முறைப் பயிற்சியுடனும் G.C.E. (A/L) மாணவர்களிற் கான GIT பாடநெறிக்கான வரையறையற்ற செய்முறைப் பயிற்சியுடனும் கூடிய, மாணவர்களின் வசதிக்கேற்ற நேர பாடநெறி ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். தனித்துவமான கல்வியகம், பாதுகாப்பான சூழல், வரையறையற்ற பயிற்சி நேரங்கள். சலுகைக் கட்டணங்கள். புதிய பிரிவின் அனுமதிகளுக்கு முந்துங்கள்.

**பணிப்பாளர்** (SACLA)



## மக்லியோட் (Mc.Leod)
**வைத்தியசாலை, இணுவில்.** (ஸ்தாபகம் 1898)
(தென்னிந்திய திருச்சபை - அமெரிக்கன் இலங்கை மிஷன்)

யாழ்.போதனா வைத்தியசாலை வெவ்வேறு பிரிவுகளின் வைத்தியநிபுணர்கள் இணுவில் மக்லியோட் வைத்தியசாலையில் வைத்திய சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். இவ் வைத்திய நிபுணர்களில் பின்வரும் நிபுணர்களும் மக்லியோட் வைத்தியசாலையில் நிபுணத்துவ சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதை அறியத்தருகின்றேன்.

1. குழந்தையியல் வைத்திய நிபுணர்.
   Consultant Paediatrivian
   Dr.சித்திரா வாமதேவன்
   திங்கள் மாலை 4 மணி
2. காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்
   Consultant E.N.T. Surgeon
   Dr.B.திருமாறன்
   புதன் மாலை 4.30 மணி

★ இவ் வைத்தியசாலையில் ச[illegible]த்தப் பரிசோதனைகளும் செய்து கொடுக்[illegible]படும்.

Dr.B.திருமாறன் அவர்கள் மானிப்பாய் கிறீன் ஞபகார்த்த வைத்தியசாலைக்கும் புதன் மாலை 4 மணிக்கு வருகை தந்து மருத்துவ சேவையை நடத்துகின்றார்.

குழந்தையியல் நோயாளர்களும் காது, மூக்கு, தொண்டை நோயாளர்களும் மேற்கூறிய இரு வைத்திய நிபுணர்களின் சேவைகளால் பயனடையலாம்.

அனைவருக்கும்
**தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக**

தொலைபேசி:
021 222 7669

வைத்திய மேலதிகாரி,
Medical Superintendent


## கண்ணீர் அஞ்சலி

*2007 தாதியபிரிவில் கல்வி பயிலும் தாதிய மாணவனாகிய செல்வன் பாலசுப்பிரமணியம் பகீரதனின் அன்புத் தந்தை*

### சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர், போதனாசிரியர்கள்,
2006A பிரிவு, 2006 II பிரிவு,
2007A பிரிவு, 2007 B பிரிவு,
தாதியமாணவர்கள், உத்தியோகத்தர்கள், துணை உத்தியோகத்தர்கள்.

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
28 ★ 02 ★ 1930



உதிர்வு
13 ★ 03 ★ 2009

### அமரர் வேலுப்பிள்ளை தங்கம்மா

கடந்த 13.03.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (16.04.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய உபசரணையிலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.

சென்.மேரிஸ் வீதி,
2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை.

தேவா (பெயின்ரர்)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புப் பிரதேசம் மீதான நேற்றைய தாக்குதலில் 219 பேர் பலி! 408 பேர் காயமுற்றனர் எனத் தகவல்

கொழும்பு, ஏப்.16

புதுக்குடியிருப்பு மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் படையினர் நேற்று நடத்திய எறிகணை, வான், பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் 219 பேர் பலியானதுடன் 408 பேர் படுகாய மடைந்துள்ளனர் என்று இணையத்தளங்கள் நேற்றிரவு தகவல்களை வெளியிட்டன.

நேற்றைய சம்பவங்கள் குறித்து இணையத்தளங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை, மாத்தளன் மற்றும் இடைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்களை நோக்கி நேற்று புதன்கிழமை காலை தொடக்கம் இரவு வரை படையினர் செறிவான எறிகணை, வான், பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் முள்ளிவாய்க்கால் மக்கள் குடியிருப்பு பகுதி மீது நேற்று முற்பகல் 10 மணியளவில் வான்படையின் 'கிபீர்' ரக வானூர்திகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 24 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை மாத்தளன், வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் சிறிலங்கா வான்படையின் எம்ஐ-24 ரக உலங்குவானூர்தி பீரங்கி, துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருக்க பல்குழல் வெடிகணைத் தாக்குதல்களையும் சமநேரத்தில் படையினர் நடத்தியுள்ளனர்.

நேற்றைய தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டோரின் பெயர் விவரம் வருமாறு:

மருதமலை செவ்வானம் (வயது 05), கனகையா பார்த்தீபா (வயது 10), கதிரமலை மருதன் (வயது 11), கருணை கோபிதாஸ் (வயது 13), மூர்த்தி முகுந்தன் (வயது 14), பேபிறோசா (வயது 34), ரகுதாஸ் சுபோதினி (வயது 19), மகாலிங்கம் கற்பகாதேவி (வயது 58), பாலசுப்பிரமணியம் இலக்குமி (வயது 42), மயில்வாகனம் புவனேஸ்வரி (வயது 53), மகேந்திரன் தெய்வானை (வயது 50), கறுப்பையா சத்தியகலா (வயது 24), செல்வரட்ணம் கலாவதி (வயது 55), செல்வராசா டயஸ்குமார் (வயது 20), சிங்கராசா பிரதீபன் (வயது 27), சிவகணேசமூர்த்தி பிரதீட்சா (வயது 02), செல்வகதிர் பலோமினி (வயது 18), சின்னராசா (வயது 70), கனகரட்ணம் பானுமதி (வயது 38), மயில்வாகனம் செபமாலை (வயது 58), தங்கராசா பழனி (வயது 68), பேச்சிமுத்து கண்ணாயி (வயது 48), சோதரன் மருதமலை (வயது 45). (அ)

# முல்லைத்தீவில் தோன்றியுள்ள 'இரத்தப் பாதை' ஒபாமாவுக்கு வந்துள்ள முதலாவது பெரும் பிரச்சினை

## தேசிய பாதுகாப்பு பணிப்பாளர் சமந்த கூறுகிறார்

நியூயோர்க், ஏப்.16

இலங்கையின் முல்லைத்தீவு கரையோர பாதுகாப்பு வலய பகுதியில் மேற்கொள்ளப்படும் 'இரத்தப்பாதை'யே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நிர்வாகத்திற்கு வந்துள்ள முதலாவது பெரிய பிரச்சினை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னர் சிற்றி பிறெஸ் செய்தியாளர் மத்தியு ரஸ்ஸல் இணையத்தளத்தின் ஊடாக நடத்திய கலந்துரையாடலில் 'நகரத்தில் இருந்து பிரச்சினை' என்ற இனப்படுகொலை சம்பந்தமான நூலின் ஆசிரியையும் அமெரிக்க தேசிய பாதுகாப்புத்துறை சிரேஷ்ட பணிப்பாளருமான சமந்தா பவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார். சர்வதேசம் ஏன் இந்த பிரச்சினையை ஜி-8 மற்றும் ஏனைய மாநாடுகளில் எடுத்துக்கொள்ளவில்லை எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிழக்குத் திமோர் விடயத்தில் இந்தோனேசியாவை அமெரிக்கா பயமுறுத்தியமைக்கு சமமாக இந்த விடயத்திலும் அமெரிக்கா செயற்படவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்தப்படுகொலை திட்டத்தை திட்டமிட்டு செயற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ள அந்த நூலில் இலங்கை அரசாங்கம் கோரியுள்ள 2 பில்லியன் டொலர்கள் கடனில் 1.6 பில்லியன் டொலர்களை போருக்கும் அகதிகளின் தடுப்பு முகாம்களுக்கும் பயன்படுத்தவுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அமரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இந்தக் கடனை நிறுத்தவேண்டும் என இன்னர் சிற்றி பிறெஸ் செய்தியாளர் கேட்டுள்ளார்.

## இந்திய நாடாளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நடைபெறவுள்ளது.

முதற்கட்ட வாக்குப் பதிவு நடைபெறும் 124 தொகுதிகளிலும் மொத்தம் 1,715 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் 122 பேர் பெண்களாவர்.

இன்று நடைபெறும் முதற்கட்ட வாக்கெடுப்பில் 3 லட்சத்து 166 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. 9 லட்சம் பேர் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்தியாவின் துணைத் தேர்தல் ஆணையாளர் ஆர். பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## கொழும்பின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்கள் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

கொழும்பின் புறநகர்ப் பகுதிகளான களுபோவில, பாணந்துறை மற்றும் பகுதிகளில் அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் - என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

## போர் நடைபெறும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவுகின்றமையாலும் சுத்தமான நீர் அருகி வருவதாலும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்கிறார்கள் என்று செஞ்சிலுவை சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

போர்ப் பிரதேசங்களில் வாழும் பொது மக்களுக்கான சுகாதார வசதிகள் போதுமான நிலையில் இல்லாதமையால் அங்கு தொற்றுநோய் பரவும் ஆபத்து இருக்கிறது எனவும் கொழும்பிலுள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பேச்சாளரான சரசி விஜேரட்ண தெரிவித்தார்.

ஆனாலும் தொற்று நோய் பரவல் ஏதும் இதுவரை ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-சி)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் விசுவமடுப் பிரதேசத்தில் 51 ஆவது படைப்பிரிவு மேற்கொண்ட தேடுதலின்போது யுத்த டாங்கிகளை நிர்மூலம் செய்யக்கூடிய கண்ணிவெடிகளையும் மோட்டார் குண்டுகள் உள்ளிட்ட இராணுவத் தளபாடங்களையும் மீட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-07)

## ஐரோப்பிய ஒன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்டுள்ளது.

அரசு விடுத்துள்ள இரு நாள் தாக்குதல் இடைநிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமை, மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமாக யுத்த இடை நிறுத்தத்தை நீடிக்குமாறும் விடுதலைப் புலிகள் பொது மக்களை மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டும் என்றும் செக் குடியரசு கோரியுள்ளது.

## தாக்குதல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவுடன் நடத்தப்பட்ட தொலைபேசி உரையாடலின்போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இழப்புக்களைத் தவிர்க்கும் முதல் கட்ட நடவடிக்கையாக இந்த யுத்த நிறுத்த (தாக்குதல் இடைநிறுத்த) அறிவிப்பை தாம் நோக்குகிறார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 48 மணிநேர யுத்த இடை நிறுத்த அறிவிப்பின் பின்னர் மீண்டும் யுத்தம் ஆரம்பக்கப்பட்டால் அது ஒரு துயரமான நிலையாகவே நோக்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அப்பாவிப் பொதுமக்களை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமாயின் யுத்த நிறுத்த காலம் மேலும் நீடிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பட்டுள்ளார். இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் சர்வதேச சமூகம் காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எம்.கே.நாராயண......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் போர்முனைப்புகளைத் தடுத்துநிறுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இவர்கள் கேட்டுக்கொண்டனர் எனவும் கூறப்பட்டது.

டில்லியில் உள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பை யடுத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன் கூறியவை வருமாறு -

"பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள இரண்டரை லட்சம் மக்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இலங்கைக்கான அனைத்து வகையான இராணுவ உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும். அங்குள்ள தமிழர்களுக்கான வாழும் உரிமை மறுக்கப்படக் கூடாது என்பதை நாம் வலியுறுத்தியிருக்கின்றோம் - என்றார்.

மேலும் அவர் கூறுகையில், இன்று அதாவது வியாழக்கிழமை இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனனை தாம் சந்திக்கவிருப்பதாகவும் அதனைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் தான் உரையாற்றவிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

## படையினரிடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை இராணுவத்தினர் கிளிநொச்சி நலன்புரி நிலையத்தில் தங்கவைத்துள்ளதாகவும் தேவையான அனைத்து வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. (அ-07)

## பாதுகாப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலயத்தில் உள்ள பொது மக்கள் பதுங்குகுழிகளுக்குள் தஞ்சம் அடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிகாலை 5.30 மணிக்குப் பின்னர் மோதல்கள் சற்று குறைவடைந்திருந்தன. எனினும் 7.30 க்கு பின்னர் மீண்டும் உக்கிர மோதல்கள் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றன என்றும் மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் வலைஞர்மடம் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை 7.30 மணியளவில் விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு தினங்களாக ஷெல் தாக்குதல்கள் பெரிய அளவில் இடம்பெறவில்லை என்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களே வலைஞர்மடம் பகுதியில் கேட்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாதுகாப்பு வலயப்பகுதியில் இருந்து 249 பேர் பாதுகாப்பு தேடி, இராணுவத்திடம் வந்துள்ளனர் எனவும், இதுவரையில் மொத்தமாக 68 ஆயிரத்து 47 பேர் இவ்வாறு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்துள்ளனர் எனவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## வன்னியிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப் பேச்சாளர் பர்ஹான் ஹக் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். எனினும் இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. ஏன் எடுக்கவில்லையென்பதற்கான தெளிவான விளக்கத்தை அவர் அளிக்கவில்லை.

இலங்கை அரசு இவர்களை முகாம்களில் தடுத்து வைத்திருப்பது சர்வதேச சட்டங்களுக்கு முரணானதா என்பது குறித்த கேள்விக்கும் அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் இணைப் பேச்சாளர் பர்ஹான் ஹக் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் பாதுகாப்பு வலயத்திலிருந்து தப்பியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் சில ஐக்கியநாடுகள் சபைப் பணியாளர்கள் சிலர் அவர்களது குடும்பத்தினரும் உள்ளனர் என அறிகிறோம்.

நாங்கள் அறிந்த வகையில் அவர்கள் இன்னமும் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களிலேயே உள்ளனர்.

நாங்கள் அவர்களுக்கு நடமாடுவதற்கான சுதந்திரத்தை வழங்குமாறும், இதன் மூலம் அவர்கள் மீண்டும் மனிதாபிமானப் பணியாளர்களாக செயற்படுவதற்கான வாய்ப்பை வழங்குமாறும் இலங்கை அரசைக் கேட்டுள்ளோம்.

அரசு இதனை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ள போதிலும் அவர்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே உள்ளனர் என்றார். (அ-சி)

Subra 14, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி
O/L DAY CLASS இரு இடங்களிலும் ஆரம்பமாகியுள்ளது
காரைநகர் மாணவர்கள், ஏனையவறிய மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.
கடந்த கால மாணவர்களின் பெறுபேற்றை கேட்டுப்பார்த்தால் புரியும்.

பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை, சாவகச்சேரி
O/L DAY CLASS
ஆரம்பம்: 19.04.2009
ஞாயிறு 9 a.m
* O/L வகுப்புக்களுக்கு தனித்துவமான நிறுவனம்
* A/L 2011 கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஐடியல் அக்கடமி
சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | நீராவியடி, யாழ்.நகர். | அந்தோனியார் கோயில் அருகாமை, மானிப்பாய்.
மாணவச் செல்வங்களே! பொறுத்திருங்கள்; புத்தாண்டில் நல்லநாளில் சுபவேளையில் ஆரம்பிக்கின்றோம்.
மூன்று நிறுவனங்களிலும்
ஏப் 20 இல்
A/L 2011 கலை வர்த்தக பிரிவுகள்
யாழ்ப்பாணம் 9 am
சண்டிலிப்பாய் 11am
மானிப்பாய் 2 pm
O/L Day Class

இன்று சுப நேரத்தில் பிரிவு II
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ். கிளை: 417, கே.கே.எஸ்.றோட்
(இரு இடங்களிலும்) (யா/இந்து கல்லூரி அருகில்)
O/L DAY CLASS (8.30 - 2.00)
ஆரம்பம்: 16.04.2009 8.30 மணி
* இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டும்.
* 33 வருடகாலமாக DAY CLASS கட்டுப்பாட்டுடனும் சிறப்புடனும் நடைபெறும் ஒரே இடம்.
* தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி.
* பிரிவு 3 மிக விரைவில்.
இன்று நாள் வகுப்புகள் 6,7,8,9, O/L, A/L காலை 8 மணிக்கு ஆரம்பம்.

இணையற்ற சேவையினூடு நிகரற்ற சாதனையாளர்களை உருவாக்கிய நிறுவனத்தில்
O/L DAY CLASS பகல் நேர வகுப்பு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
அதிபர்.

BITSMANS கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2011
கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல்
ஆரம்பம்: 18.04.2009 சனி 2.00 p.m.
★ கலை, வர்த்தகம் ★
தமிழ் - N.பாலா
புவியியல் - N.பாபு
அரசியல் - இளங்கோ
கிறிஸ்தவம் - S.K.யூட்
வணிகக்கல்வி - ரூபன்
வரலாறு - M.பத்மன்
இந்.நாகரிகம் - ஜெயக்குமார்
பொருளியல் - P.சுன்
நாடக.அரங். - மங்களேஸ்
கணக்கீடு - N.ராஜன்
★ கணித, உயிரியல் ★
பௌதிகம் - ஜெயசீலன் பார்த்தீபன்
இணைந்த கணிதம் - பிரதீபன்
இரசாயனம் - N.மகேஸ்வரன்
உயிரியல் - ஞானேந்திரன் தயாபரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.